பக்கங்கள் : 14+கல்விச்சுடர்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 09 சனிக்கிழமை (22.04.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :146

# ஹெலி வசதி உறுதியாகும் வரை போவர் கொழும்பில் தங்கி நிற்பார்

## அவரது பயணம் ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப்ரல்22

**தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகளும் பொறுப்பாளர்களும் தமது தலைமையைச் சந்திப்பதற்கு வன்னிக்கு வந்து திரும்புவதற்கான ஹெலிகொப்டர் வசதி வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்படும்வரை, நோர்வே அனுசரணைப் பணிக்குப் பொறுப்பான விசேட தூதுவர் ஜான் ஹன்ஸன் போவர் கொழும்பில் தங்கியிருப்பார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

**இக்காரணத்தினால் இன்று விடிகாலையில் லண்டன் புறப்படவிருந்த அவரின் பயணம் மேலும் மூன்று, நான்கு நாள்களுக்கு ஒத்திப்போடப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.**

ஹன்ஸன் போவரின் முன்னைய பயணத் திட்டத்தின்படி இன்று லண்டன் நேரப்படி காலை 10 மணிமுதல் அவருக்கும் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துக்கும் இடையில் பாலசிங்கத்தின் லண்டன் இல்லத்தில் சந்திப்பு இடம்பெறுவதாக இருந்தது.

ஆனால், போவர் தொடர்ந்து சில தினங்கள் கொழும்பில் தங்கியிருக்க வேண்டிய நிலைமை இருப்பதால் இன்றைய சந்திப்பைப் பிற்போடவேண்டியுள்ளதாக நோர்வேத் தரப்பு நேற்று மதியுரைஞர் பாலசிங்கத்துக்கு அறிவித்தது என்றும் அறியவந்தது.

புலிகளின் கிழக்குத் தளபதிகளின் பயணத்துக்கு ஹெலி வசதியை உறுதிப்படுத்துவதும் -

அதை உறுதிப்படுத்தியதன் பின்னர், அதன்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சேருவில கிளைமோரில் இரு பொலீஸார் பலி!

திருமலை,ஏப். 22

திருகோணமலை, சேருவில பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இரு பொலீஸார் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

கிளிவெட்டியிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தபோது சேருவில பிரிவுக்குட்பட்ட தங்கநகர் கிராமத்தில் பொலீஸாரின் வாகனமே கிளைமோர் குண்டில் சிக்கியது

சம்பவ இடத்திலேயே இருவர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் சடலங்களுடன் காயமடைந்தவர்களும் சேருநுவர வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டனர். படுகாயமடைந்த பொலீஸாரைக் கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கான

(14ஆம் பக்கம் பார்க்க)

## 67 பேர் ஒன்றாக போராட்டத்தில் இணைவு

பளை,ஏப்.22

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் ஒரே தடவையில் 67 பேர் தம்மை இணைத்துக்கொண்டனர்.

நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு பளை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற அரசியல் கருத்தரங்கின் போதே இவர்கள் அனைவரும் இணைந்தனர்.

இவர்களில் எழு யுவதிகளும் அடங்குவர். (ஐ-7)(22)

## கிளைமோரை அடுத்து கிளிவெட்டியில் தமிழர்களுக்கு எதிராகப் பெரும் கலவரம்!

### இருவர் படுகொலை; வீடுகள், உடைமைகள் எரிப்பு

திருகோணமலை,ஏப். 22

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று வெள்ளிக்கிழமை சிங்களக் காடையர்கள் நடத்திய மற்றுமொரு இனக்கலவரத் தாக்குதலில் தமிழர்களின் 15 இற்கு மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாகின. தமிழர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிவெட்டி - தோப்பூர் வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற 'கிளைமோர்' தாக்குதலையடுத்து, கிளிவெட்டி, பாரதிபுரம், மேன்காமம் ஆகிய பகுதிகளில் தமிழர்களுக்கெதிரான வன்செயல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன.

நேற்றைய கிளைமோரில் கொல்லப்பட்ட ஊர்காவலரின் ஊரைச் சேர்ந்த சிங்களவர்களே தமிழர்களுக் கெதிரான தாக்குதலை நடத்தினர் எனக் கூறப்படுகின்றது. இந்தத் தாக்குதலில் சந்திரசேகரன் என்பவரும் மற்றுமொரு தமிழ் இளைஞரும் உயிரிழந்தனர். இவர்கள் இருவரும் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழர்களின் 15 இற்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதையடுத்து அந்தப் பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் வன்னியில் புலிகளுடன் பேச்சு

கிளிநொச்சி, ஏப்.22

கிளிநொச்சிக்கு நேற்றுப் பிற்பகல் 2மணியளவில் வந்து சேர்ந்த யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்ஸன் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனுடன் பேச்சுகளை நடத்தினார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி வந்திருந்த நோர்வேயின் விசேட தூதுவர் ஜான் ஹன்ஸன் போவருக்கும், புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் நடந்த பேச்சுகளின் தொடர்ச்சியாகவே கண்காணிப்புக் குழுத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள வவுனியா புதூர்காட்டில் கிளைமோரில் சிவிலியன் பலி

புளியங்குளம்,ஏப்.22

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வவுனியா புதூர்காட்டுப் பகுதியில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்க் குண்டுத் தாக்குதலில் சிவிலியன் ஒருவர் உயிரிழந்தார்.

புதூருக்கும் நவ்விக்கும் இடையிலுள்ள காட்டுப்பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் புளியங்குளம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனை முகாமையாளரான மு. கந்தசாமி எனத் தெரிவிக்கப்பட்டது. இவர் ஆறு பிள்ளைகளின் தந்தையார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணியே இந்தக் கிளைமோர்த் தாக்குதலை நடத்தியுள்ளது என்று விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் குற்றம் சுமத்தியுள்ளார். இது விடயமாக அவர், யுத்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் இளைஞனின் கொலைக்கு நேற்று கடையடைத்துக் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்.நகரில் கடந்த 17ஆம் திகதி இளம் முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் இனந்தெரியாத நபர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டதைக் கண்டித்து நேற்று யாழ்.நகரில் கதவடைப்பு இடம்பெற்றது. இதனால் நகரில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டன. வர்த்தக நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்தன.

குடாநாட்டின் ஏனைய பிரதான நகரப் பகுதிகளிலும் இந்தக் கடையடைப்புப் போராட்டம் இடம்பெற்றது. (14ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தம் எந்நேரமும் முறியலாம் மக்களே வன்னிக்கு இடம்பெயருங்கள்!

### பொது அமைப்புகளின் ஒன்றியம் அவசர கோரிக்கை

கிளிநொச்சி,ஏப்.22

போர்நிறுத்த உடன்படிக்கை எந்நேரமும் முறிவடையும் சூழ்நிலை உருவாகி உள்ளதால் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மக்களை உடனடியாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இடம்பெயருமாறு யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக பொது அமைப்புகளின் ஒன்றியச் செயலாளர் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

அன்பார்ந்த எம் உறவுகளே!

யாழ்ப்பாண [illegible] நிலை வரும்.... சுமுகமான நிலை வரும்..... என நம்பி கொலைச் சதி வியூகத்திற்குள் சிக்குண்டு உயிரிழக்கப் போகின்றீர்களா?

சற்றுச் சிந்தியுங்கள்!

அதற்கான நேரமும் தேவையும் இப்போது எழுந்துள்ளது.

[illegible] மண்மீது புரியும் கொடூரங்களில் இருந்து விடுபட வேண்டாமா?

இளையோரை இலக்குவைத்து இராணுவப் படுகொலைகள் தொடர்கின்றன.

20 மீற்றர் அகல பயணப் பாதை எப்பொழுதும் மூடப்படலாம். போர் மூளுமாயின் இப்பாதையைக் கடக்கமுடியுமா?

புத்தூர் அந்திரான்வெளி ஐந்து இளைஞர்களின் படுகொலையை மறந்துவிட்டீர்களா?

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



யாழ்.நகரப் பகுதியில் இளம் முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று நடத்தப்பட்ட கடையடைப்பின்போது நகரப் பகுதியில் வர்த்தக நிலையங்கள் மூடப் பட்டு வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருப்பதை முதல் படத்தில் காணலாம். நேற்றுப் பிற்பகல் யாழ்.நகரப் பகுதியில் மீளக்குடியமர்ந்த முஸ்லிம்கள் சார்பாக நாவாந்துறைப் பள்ளி வாசலின் உப தலைவர் சியானாஸ் தாஷீர், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரியிடம் மகஜர் கையளிப்பதையும் அங்கு கூடியிருந்த முஸ்லிம்களையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

# அரச அலுவலகங்கள், பாடசாலைகள் தொடங்கும் நேரத்தை முன்நகர்த்த முடிவு

## உள்நாட்டலுவல்கள் பிரதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.22

அரச அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரத்தை அரை மணிநேரத்தால் முன்நகர்த்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இத்தகவலை அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் பிரதியமைச்சர் பி.பி. ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நேரம் அரைமணித்தியாலத்தால் பின்நகர்த்தப்பட்டதையடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும்- அரச அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரம் நிறைவு செய்யும் நேரம் என்பவற்றை வர்த்தமானி அறிவித்தல் மூலம் விரைவில் வெளியிடவுள்ளதாகவும் - பிரதியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி தீர்மானத்தின்படி பாடசாலைகள் ஆரம்பிக்கும் நேரத்தை காலை 8 மணியிலிருந்து 7.30 மணிக்கு முன்நகர்த்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-203)

# கிளிவெட்டிக் கிளைமோரில் ஊர்காவலர் ஒருவர் உயிரிழப்பு!

## மற்றொருவர் படுகாயமுற்றார்

திருமலை,ஏப்.22

திருகோணமலை கிளிவெட்டியில் நேற்றுக் காலை இடம்பெற்ற கிளைமோர்க் குண்டுத் தாக்குதலில் ஊர்காவலர் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றுமொரு ஊர்காவலர் படுகாயமடைந்தார்.

கிளிவெட்டி - தோப்பூர் வீதியின் 58ஆம் கொலனிப் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 8.40 மணியளவில் இடம்பெற்றது. தெஹிவத்தை தென்னந்தோப்பு வேலியில் காவற் கடமையில் ஈடுபட்டிருந்த ஊர்காவலர்களே கண்ணிவெடியில் சிக்கினர்.

இந்தச் சம்பவத்தையடுத்து தாக்குதல் நடைபெற்ற பகுதியில் படையினர் தீவிர தேடுதல்களை நடத்தினர். இந்தச் சம்பவத்தினால் கிளிவெட்டி - தோப்பூர் வீதியில் போக்குவரத்துப் பலமணிநேரம் ஸ்தம்பிதமடைந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-க)

# அமைச்சர் நிமாலுடன் நேற்று போவர் கலந்துரையாடல்

கொழும்பு, ஏப்.22

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான நோர்வேயின் விசேட தூதுவர் ஜான் ஹன்ஸன் போவர் நேற்றுக் கொழும்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அமைதிப் பேச்சுக்கான அரச குழுவின் தலைவரும், அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா ஆகியோரைத் தனித்தனியே சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அடுத்த கட்ட அமைதிப் பேச்சுகளை முன்னெடுப்பது குறித்தும், அதற்காக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்துமே இந்தப் பேச்சுகளின்போது ஆராயப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்றுமுன்தினம் வன்னியில் விடுதலைப் புலிகளுடன் தாம் நடத்திய பேச்சுகள் குறித்தும் போவர், நேற்றைய இந்தச் சந்திப்புகளின்போது விளக்கமளித்திருக்கிறார். அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் கலாநிதி கொஹோனன்வையும் போவர் நேற்றிரவு மீண்டும் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது.

(ஐ-க)

# வவுனியாவில் முஸ்லிம் இளைஞர் சுட்டுக் கொலை!

வவுனியா,ஏப்.22

வுனியா, மணிப்புரத்தில் நேற்றுமுன்தினம் முஸ்லிம் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அவரது மனைவியும் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு எட்டு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. வீட்டின் கதவை உடைத்துக் கொண்டு திடீரென உட்புகுந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இலும் நிஸார் என்பவர் கொல்லப்பட்டார் என வவுனியாப் பொலீஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த இவரது மனைவி நிஸார் பபி வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்தச் சம்பவம் குறித்து வவுனியாப் பொலீஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-க)

# கரை ஒதுங்கிய இளைஞர் சடலம்

மட்டக்களப்பு - கல்லடி கடற்கரைப் பிரதேசத்தில் கரையொதுங்கிய நிலையில் காணப்பட்ட சடலமொன்றைத் தாங்கள் மீட்டுள்ளனர் என மட்டக்களப்புத் தலைமையகப் பொலீஸார் தெரிவித்தனர்.

முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. சடலத்துக்குரியவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

பொதுமக்களினால் வழங்கப்பட்ட தகவலொன்றை அடுத்து பொலீஸார் சடலத்தை மீட்டு மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (ஐ-க)

# மட்டுவிலில் ஆயுதங்களை படையினர் மீட்டனராம்!

யாழ்ப்பாணம், ஏப். 22

இரகசிய தகவலொன்றையடுத்து யாழ்ப்பாணம், மட்டுவிலில் மாவீரர் குடும்பமொன்று வசிக்கும் வீட்டை சோதனையிட்ட படையினர் பெருந்தொகையான ஆயுதங்களை அங்கிருந்து கைப்பற்றியிருக்கின்றனர் என இராணுவத் தலைமையகம் நேற்று அறிவித்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட இந்தத் தேடுதலின்போது 12 கிளைமோர் குண்டுகளும், 39 கைக்குண்டுகளும், 50 டெட்டனேட்டர்களும் ஆள்களுக்கெதிரான பத்து கண்ணிவெடிகளும், 8 ரொக்கட் கிரனேட்டுகளும், 110 ரி.என்.ரி. வெடிமருந்துக் குச்சிகளும், 5 ரி-56 ரக துப்பாக்கிகளும் இவற்றுக்குரிய 1,400 ரவைகளும், இராணுவ சீருடைகளும் மேலும் பல வெடிமருந்துப் பொருள்களும் கைப்பற்றப்பட்டன என இராணுவத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிவிலியன் ஒருவர் கொடுத்த தகவலொன்றின் அடிப்படையில் கோப்பாயிலிருந்து பெருமளவு கிளைமோர் குண்டுகள் கைப்பற்றப்பட்டன எனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-க)

# பத்திரிகையாளர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்த நிர்வாகக் கூட்டம் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

சங்கத் தலைவர் சி.கதிர்காமத்தம்பி தலைமையில், பிற்பகல் 3 மணிக்கு சங்க அலுவலகத்தில் இடம்பெறும் இக்கூட்டத்தில் நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# படை முகாம்களுக்கு அருகில் இருப்பதைத் தவிருங்கள்!

## 'பொங்கி எழும் படை' அறிவிப்பு

மட்டக்களப்பு, ஏப். 22

சிங்கள கூலிப்படையினருக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளதால் படையினருக்கு அருகிலோ அல்லது அவர்களுடைய முகாம்களுக்கு அருகிலோ இருப்பதை மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்று மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை கேட்டிருக்கிறது.

'எடுத்த சபதம் முடிப்போம்!' - என்ற தலைப்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை நேற்று அறிக்கையொன்றை விடுத்திருக்கிறது. அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

''சமாதானத்தின்பால் நாம் கொண்டிருந்த கொஞ்சநஞ்ச நம்பகத்தன்மையும் சிங்கள இனவாத அரசினது இனவெறித்தனத்தால் எம் மனங்களிலிருந்து அகன்றிருக்கின்றது.

''யுத்தநிறுத்தம், சமாதானம் என்ற போர்வைக்குள் இருந்துகொண்டு சிங்கள அரசாங்கமும், இராணுவமும் எமது மக்கள் மீது செய்து வருகின்ற கொடுமையான, அரக்கத்தனமான [illegible] வெறித்தனத்தை [illegible] பொறுத்துக் கொண்டிருக்க எம்மால் முடியவில்லை.

''எமது தமிழ் இனத்தையே அழித்து ஒழிக்கும் கபட நோக்கத்தோடு சிங்கள அரசாங்கம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

''இதனை அறிந்துகொள்ளாத அப்பாவித் தமிழ் இளைஞர்களை ஏமாற்றி, அவர்களுக்கு ஆசைவார்த்தை காட்டி, எமது தேசத்துக்கே துரோகம் இழைப்பதற்காக துணை இராணுவக் குழுக்கள் என்ற போர்வைக்குள் செயற்பட வைத்திருக்கின்றார்கள்.

''இந்தக் குழுக்களுக்கும் எம்மால் விடுகப்படுகின்ற எச்சரிக்கையும் அறிவித்தலும் இதுவாகும்.

''நீங்கள் தமிழ்த் தேசத்துரோகிகளாக மாறி உங்கள் சொந்த வாழ்க்கையை ரணமாக்காதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறோம்.

''சிங்களக் கூலிப்படைகளுக்கு எதிரான எமது தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடைபெறவுள்ளதால் சிங்களப் படைகளுக்கு அருகிலோ அல்லது அவர்களது முகாம்களுக்கு அருகிலோ இருக்கவேண்டாம் என்பதைத் தயவாக வேண்டுகின்றோம்.

''தேசத்தின் நன்மை கருதி எம்மால் எடுக்கப்பட்டிருக்கும் இந்த முடிவு தமிழரின் விடுதலைப்போருக்கு வலுச்சேர்க்கும் என நாம் ஆணித்தரமாக நம்புகிறோம்.

''விடுதலைப் புலிகளே! உங்களைப் போன்று பொறுமைகாக்க எம்மால் முடியாது. அதற்காக வருத்தம் தெரிவிக்கிறோம்.''

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-க)

# திங்கள் முதல் பஸ் கட்டணம் உயர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.22

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் கட்டணங்கள் எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அதிகரிக்கப் படவுள்ளன. இதன்படி யாழ்ப்பாணத்துக்கும் முகமாலைக்கும் இடையேயான அரச பஸ் கட்டணம் 28 ரூபாவிலிருந்து 32 ரூபாவாக உயர்கிறது.

குடாநாட்டில் அரச பஸ் சேவைக் கட்டண மாற்றப் பட்டியலை வடபிராந்திய பொது முகாமையாளர் வெளியிட்டுள்ளார். அதன் விவரம்வருமாறு:-

| தற்போதைய கட்டணம் | அதிகரித்த கட்டணம் |
|---|---|
| 4.00 | 5.00 |
| 6.00 | 6.00 |
| 8.00 | 9.00 |
| 10.00 | 12.00 |
| 11.00 | 13.00 |
| 13.00 | 15.00 |
| 15.00 | 17.00 |
| 16.00 | 19.00 |
| 16.50 | 19.50 |
| 18.00 | 21.00 |
| 19.00 | 22.00 |
| 19.50 | 23.00 |
| 20.00 | 23.50 |
| 21.00 | 24.00 |
| 22.00 | 26.00 |
| 23.00 | 27.00 |
| 24.00 | 28.00 |
| 25.00 | 29.00 |
| 26.00 | 30.00 |
| 27.00 | 31.00 |
| 28.00 | 32.00 |
| 29.00 | 34.00 |
| 30.00 | 35.00 |

(ஆ-7-14)(22)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# புதுடில்லியின் ஆலோசனையில் புதைந்துள்ள அடிப்படை அம்சம்

இலங்கையில் வன்முறைகள் தீவிரமடைந்து, நிலைமை சீர்கெட்டு வருவது குறித்து ஆழ்ந்த கவலையும், சிரத்தையும் கொண்டிருக்கும் இந்தியா, கொழும்பு அரசுக்கு மூன்று முக்கிய விடயங்களைச் சுட்டிக்காட்டியிருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

ஓர் அண்டை நாடு என்ற முறையில் - இப்பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்தி என்ற வகையில் - இலங்கையின் நட்பு நாடு என்ற ரீதியில் - இலங்கையின் உள் விவகாரங்களுக்குள் அதிகம் தலையிடாமல், அதே சமயம் சொல்லவேண்டியதை வெளியிலிருந்து சுட்டிக் காட்டுவது போல புதுடில்லி நடந்து கொண்டிருக்கின்றது என்றே கருதவேண்டும்.

திருகோணமலையில் தமிழர்களுக்கு எதிரான பேரினவாத வன்முறை - இனக்கலவரம் - கட்டவிழ்த்து விடப்பட்ட போது, ஓரிரு மணி நேரத்துக்குள்ளேயே இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு புதுடில்லியின் கவலையை உறைப்பாக எடுத்துரைத்திருந்தார் என்பது தெரிந்ததே.

அதன் தொடர்ச்சியாகவே இப்போது மூன்று முக்கிய அம்சங்களை புதுடில்லி, கொழும்புக்குத் தெளிவுபடுத்தியிருப்பதாகக் கருத வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் மூன்று முக்கிய அடிப்படை விடயங்களில் உண்மை நிலையை - யதார்த்தத்தை - இந்தியா, இலங்கைக்கு உணர்த்த முயன்றிருக்கின்றது.

*✱ யுத்தநிறுத்தம் இல்லாதிருப்பதை விட குறைகளுடைய யுத்தநிறுத்தம் மேலானது.*

*✱ இலங்கையின் ஐக்கியம் குறித்துக் கவனம் செலுத்தும் அதே சமயம், அற்ப விடயங்களைப் பெரிதாக்கி, அது குறித்து இழுபறிப்பட வேண்டாம்.*

*✱ அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காகத் தெற்கில் ஒரு நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்ப வேண்டும்.*

- இவையே இந்தியா, இலங்கைக்கு இப்போது சுட்டிக்காட்டியிருக்கும் மூன்று அம்சங்களுமாகும்.

இந்த மூன்று விடயங்களையும் ஊடுருவி நோக்கினால் இவற்றின் ஊடாக கொழும்பு அரசுக்கு புதுடில்லி கூறவிரும்பும் அடிப்படைக் கருத்து என்னவென்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

யுத்தநிறுத்தம் இல்லாதிருப்பதை விட குறைகளுடைய யுத்த நிறுத்தம் மேலானது என்று குறிப்பிடுவதன் மூலம் தற்போதைய யுத்தநிறுத்த உடன்பாட்டைக் கடுமையாக விமர்சித்து அதற்கு எதிராக மோசமான கருத்துக்களை வெளியிட்டு வரும் பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் குரலுக்கு எடுபடாதீர்கள் என்று கொழும்பு அரசுக்கு ஆலோசனை கூற முற்படுகின்றது புதுடில்லி.

விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகளின் போக்குவரத்துக்கு வழமையாக வழங்கப்பட்டு வந்த விமானப்படை ஹெலி வசதி போன்ற அற்ப விடயங்களைப் பெரிதுபடுத்தி, 'பிகு' பண்ணாமல் தாராளப் போக்குடன் நடந்துகொள்ள இலங்கையைக் கோருகின்றது புதுடில்லி.

தமது நேச அணிகளாகத் தாம் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கும் பௌத்த, சிங்களப் பேரினவாத சக்திகளைத் திருப்திப்படுத்துவதற்காகவே இத்தகைய அற்ப விடயங்களில் முறையற்ற வகையில் பிடிவாதம் பிடித்து நிலைமையைக் குழப்புகின்றது இலங்கை அரசுத் தலைமை என்பது யாவருக்கும் தெரிந்ததுதான்.

அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக தெற்கில் ஒரு நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்புமாறும் புதுடில்லி வற்புறுத்துகின்றது.

அமைதி முயற்சி விடயத்தில் தென்னிலங்கையின் பிரதான இரு கட்சிகளும் இணைந்து நல்லிணக்கமாகச் செயற்படுவதற்குத் தயாராகத்தான் இருக்கின்றன. ஆனால், அதற்கு இடைஞ்சலாகவும், முட்டுக்கட்டையாகவும் தென்னிலங்கையின் பௌத்த, சிங்கள தீவிரப் போக்குடைய ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்றவைதான் உள்ளன என்பது தெளிவு.

ஆக, இந்தியா இப்போது இலங்கைக்கு சுட்டிக்காட்டியிருப்பதாகக் கூறப்படும் மூன்று அம்சங்களின் பின்னணியிலும் அடிப்படையாக ஒரே விடயம்தான் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது; மையக் கருத்தாக இழையோடுகின்றது.

அது -

தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதத்துக்கும், தீவிரவாதத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல் - அதைப் புறக்கணித்து - சுயாதீனமாக அமைதி முயற்சிகளை முன்னெடுங்கள் என்பதுதான்.

அந்த ஆலோசனை கொழும்பு அரசுக்குப் புரியுமா? புரிந்தால் அமைதித் தீர்வு சாத்தியம். இல்லையேல் போர் நிச்சயம்.

## இராணுவத்தினர் மீதான தாக்குதல்களுக்கு நாமே பொறுப்பு

# விடுதலைப் புலிகள் மீது வீண்பழி சுமத்தாதீர்; கண்காணிப்புக் குழுவுக்கு மக்கள்படை கடிதம்

கொழும்பு,ஏப்.22

படையினருக்கு எதிரான கிளைமோர், கண்ணிவெடித் தாக்குதல்களுக்கு நாம் வெளிப்படையாகவே உரிமை கோருகின்றோம். எனவே, விடுதலைப் புலிகள் மீது வீண் பழிசுமத்தாதீர்கள். விடுதலைப் புலிகள்தான் இத்தகைய தாக்குதல்களை நடத்துகின்றார்கள் என்ற தங்களது கருத்தை நாம் மறுக்கின்றோம்.

- இவ்வாறு யாழ். மாவட்ட பொங்கி எழும் தமிழீழ மக்கள் படை இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது. போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகம் ஊடாக இந்தக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில்:-

தமிழீழ மக்களாகிய எம்மீது புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மாறாக ஸ்ரீலங்கா படைகளும், ஒட்டுப்படைகளும் நான்கு வருட சமாதான காலத்தில் நடத்திய தாக்குதல்கள் காரணமாகவும் -

எம்மீது நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் காரணமாகவும் - மக்கள் படையாக நாம் ஆத்திரமுற்று ஸ்ரீலங்காப் படைகள் மீது தாக்குதல்களை நடத்தினோம். நிலைமை மோசமடைந்தது. எமக்கு வேறு வழி இருக்கவும் இல்லை. ஆனாலும், கடந்த ஜெனீவாப் பேச்சில் நம்பிக்கை கொண்ட நாம் எமது தாக்குதல்களை நிறுத்தியிருந்தோம். அத்துடன் நாம் தாக்கத் தொடங்கியபோது தங்கள் அலுவலகத்திற்கு நேரடியாக வந்து எம்மை அடையாளப்படுத்தியும் இருந்தோம். இன்றும் தயாராகவே இருக்கின்றோம்.

ஆனாலும், ஜெனீவாப் பேச்சின் பின்னரும், தமிழ்மக்கள் மீதும் எம்மீதும் இராணுவம் தனது கொலைவெறியைக் காட்டியது. எமது திருமலை மக்கள் பேரவை தலைவர் விக்கினேஸ்வரன் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டார்.

எனவே, நாம் மீண்டும் தாக்குதல்களைத் தொடங்கிவிட்டோம். எனவே, எம்மை மன்னிக்கவும். விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் பழியைப் போடுவதனூடாக ஸ்ரீலங்கா அரசிற்குத் துணை போய் அவர்களது படுகொலைகளை நியாயப்படுத்த வேண்டாம் என வேண்டிக் கொள்கின்றோம். இன்றுகூட எமது ஐந்து உறவுகளைப் புத்தூர் பகுதியில் ஸ்ரீலங்காப் படைகள் கொலை செய்துள்ளன என்பதனையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகள்தான் கிளைமோர், கண்ணிவெடித் தாக்குதல்களை நடத்துகின்றார்கள் என்ற தங்களது கருத்தை நாம் மறுப்பதோடு, அத்தாக்குதல்களுக்கு நாம் வெளிப்படையாக உரிமைகோருகின்றோம் என்பதையும் தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம்.

அத்துடன், தாங்கள் விரும்பினால் மீண்டும் நாம் வெளிப்படையாகச் சந்திக்க என்றும் தயாராக இருக்கின்றோம் என்பதனை மீண்டும் தெளிவுபடுத்துகின்றோம் - என்று அதில் உள்ளது.

# இலங்கை நிலைமை குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை

## கொழும்புக்கு 3 விடயங்களை புதுடில்லி தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.22

கொலைகள், பதில் கொலைகள் என இலங்கையில் வன்முறைகள் தீவிரமடைந்து நிலைமை சீர்கெட்டு வருவது குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை கொண்டிருக்கிறது.

புலிகளின் கிழக்குத் தளபதிகளின் பயணத்திற்கு வழங்கப்பட்ட கப்பல் வசதியை விடுதலைப் புலிகள் அவசர நடவடிக்கையாக இறுதி நேரத்தில் புறமொதுக்கி விட்டாலும்கூட, கொழும்பு இன்னும் கொஞ்சம் அதிகமாக 'இடமளிக்கும் விதத்தில்' நடந்து கொண்டிருக்கலாம் என்று இந்தியா கருதுகின்றது.

பிரபல இந்திய அரசியல் ஆய்வாளர் எம்.ஆர். நாராயண் சுவாமி எழுதியுள்ள செய்திக் கட்டுரையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளுக்கு எதிராக சர்வதேச சமூகம் கடும் அழுத்தம் பிரயோகித்துவரும் அதேவேளை, பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகை குறித்து இலங்கை அரசு உரிய கவனம் எடுக்கவில்லை என்றும் அந்தக் கட்டுரையில் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இலங்கையின் அரசியல் தலைமைக்கு மூன்று விடயங்களை இந்தியா தெளிவுபட சுட்டிக்காட்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

✱ யுத்தநிறுத்தம் இல்லாதிருப்பதை விட குறைகளுடைய யுத்த நிறுத்தம் மேலானது.

✱ இலங்கையின் ஐக்கியம் குறித்துக் கவனம் செலுத்தும் அதேசமயம், அற்ப விடயங்களைப் பெரிதாக்கி அது குறித்து இழுபறிப்பட வேண்டாம்.

✱ அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக தெற்கில் ஒரு நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்பவேண்டும்.

- இவற்றையே இலங்கை அரசுத் தலைமைக்கு இந்தியா சுட்டிக்காட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

### நாளை

**சித்திரை 10**
**ஞாயிற்றுக்கிழமை**
**23.04.2006**
**திதி: தசமி**
**பிற்பகல் : 12.46 வரை**
**நட்சத்திரம் : அவிட்டம்**
**முற்பகல் : 08.39 வரை**
**சுபநேரம் : 09.00 - 10.30**
**ராகுகாலம் : 04.30 - 06.00**

# யாழ்., முல்லைத்தீவு மீனவர் சமாசங்களுக்கு குளிரூட்டிகள், சுமையூர்தி வாகனங்கள்

## ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுறவகம் வழங்கும்

யாழ்ப்பாணம்,ஏப்.22

வடக்கு - கிழக்கில் மீன்பிடித் தொழிலை மீளக் கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ், ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுறவகம் (ஜி.ரி.இசற்) 6 குளிரூட்டி வாகனங்களையும், 6 சிறிய வகை சுமை ஊர்தி வாகனங்களையும் அன்பளிப்புச் செய்யவுள்ளது.

ஜி.ரி.இசற் கொழும்பில் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் :-

ஜி.ரி.இசற் நிறுவனம், ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் பொருளாதார ஒத்துழைப்புக்கும் , அபிவிருத்திக்குமான அமைச்சினதும், இலங்கை தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் சார்பிலும் வடக்கு - கிழக்கு மீனவரின் மேம்பாட்டுக்கு உதவிவருகின்றது.

இந்த உதவித் திட்டத்தின் கீழ், 6 குளிரூட்டி வாகனங்களுக்கும், 6 சிறிய வகை சுமையூர்தி வாகனங்களுக்கும் ஜேர்மன் அரச சார்பற்ற நிறுவனமாகிய உலக தரிசன நிறுவனம் நிதியுதவி வழங்கியுள்ளது.

மேற்படி நவீன வசதிகளுடனான வாகனத் தொகுதிகளை யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சம்மேளனத்துக்கும் முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்க சம்மேளனத்துக்கும் வழங்கும் நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பரந்தனிலுள்ள ஜி.ரி.இசற்றின் செயற்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் வைத்து முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சமாசத்துக்கு 2 குளிரூட்டி வாகனங்களும், யாழ்ப்பாணம் கடற்றொழிலாளர் சமாசத்துக்கு 4 குளிரூட்டி வாகனங்களும் கையளிக்கப்படும் - என்று அதில் உள்ளது. (எ)(25)

### உதயவாக்கு

*அமைதிப் புரட்சியை சாத்தியமற்றதாக்கி விடுகிறவர்கள் வன்முறைப் புரட்சியைத் தவிர்க்கமுடியாததாக ஆக்கிவிடுகிறார்கள்.*

*- ஜோன் எப் கென்னடி.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் பஸ்நிலையம் முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் சகல வசதிகளும் கொண்ட ஒரு பரப்புக் காணியுடன் ஒரு மாடிக்கட்டடம் (முன்புறம், பின்புறம் பாதைகள் கொண்டது) தொடர்பு: T.P.: 0713056177 (சி/49032)

## காணி விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு, மெயின் வீதியில் வீட்டுடன் 4½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0114202623. (சி/49024)

கிளிநொச்சி நகரிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் திருவையாறு முதலாம் பகுதியில் மா, பலா, தென்னை அடங்கிய 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். தேவன், 32/1, திருவையாறு, T.P.: 077 3164615 (சி/49044)

நல்லைக் கந்தனது ஆலய வீதியில் ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 222 - 3400 (49645)

பிறவுண் வீதி, கொக்குவிலில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு T.P.: 0777 111400 (49660)

## லொறி விற்பனைக்கு

EPLA தொடர் இலக்கமுடைய 14.5 அடி நீளமும் 6.8 அடி உயரமும் கொண்ட DAIHATSU (ஜப்பான்) முழு அலுமினிய பிற்றிங் (body) உள்ள லொறி விற்பனைக்குண்டு. (லீசிங்கிலோ பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 077 9184487. 120, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். (49642)

## நாய்க்குட்டிகள் விற்பனை

நல்ல இன வீட்டுப் பாதுகாப்புக்குரிய கிறேடன் இன குட்டிகளும் (பூச்சி அகற்றி தடுப்பூசி போடப்பட்டது) ஜேர்மன் செப்பேட் இன அல்சேசன் குட்டிகளும் (பூச்சி அகற்றியது) விற்பனைக்குண்டு. தொடர்பு: செல்லையா உருத்திரா, கேணியடி, கொக்குவில் மேற்கு. (49665)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாள்களில் 2kg இற்கு மேல் வளர்ச்சியடையக்கூடிய தரமான பகிரா புறொயிலர் குஞ்சுகள் 22.04.2006 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ்-ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை - முதலாம் கட்டை, பருத்தித்துறை, றஞ்சித் - 517, ஸ்ரான்லி வீதி, P.ரவி-சாவகச்சேரி. (49607)

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட No.1, Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 24.04.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளைகளிலும் கரன் - ஆலடி, உடுவில், சன்னிதி பாம் - தொண்டைமானாறு, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/48915)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/48991)

## வீடு, கடை வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியில் இரண்டு மாடி கொண்ட வீடும் கே.கே.எஸ். வீதியில் மூன்று மாடி கொண்ட கடையும் நிறுவனம் அல்லது அலுவலகப் பாவனைக்கு வாடகைக்கு விடப்படும். தொடர்பு: T.P.No.: 222 2709 (49654)

## வாகனங்கள் வாடகைக்கு

கார், வான், மோட்டார் சைக்கிள் என்பன SELF - DRIVE வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன் சாரதி அனுமதிப் பரீட்சைக்கான மோட்டார் சைக்கிள், திருமணக்கார் சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 360, பிரதான வீதி, (பஸ்தியான் சந்திக்கு அருகில்) T.P.: 021 222 9154, 0777593722 (48823)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, 1972, ரேவதி, 8இல் செவ்வாய், கிரகபாவம் 43, அரச திணைக்களம் ஒன்றில் உயர் பதவி வகிக்கும் B.A.(Special) மணமகளுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2849, மே/பா உதயன். (49237)

## தவறிவிட்டது

குருநாகல் என்னும் முகவரியை உடைய கைலாசபிள்ளை தவராசா என்பவருடைய தே.அ.அட்டை (இல. 521143070V) அரியாலைக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். கை.தவராசா, ஆண்டாவளவு, நவாலி வடக்கு, மானிப்பாய். T.P.: 077 6365899, 077 9906495 (49672)

17.04.2006 அன்று முகமாலைக்கும் வவுனியாவுக்கும் இடையில் நகைப்பொதி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0777 829230 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (49671)

இல.200, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியை உடைய மதியாபரணம் ஜெயராணி என்பவருடைய தே.அ.அட்டை (இல.627845162V) வன்னிப் பாஸ், சிறுதொகைப் பணம் என்பன யாழ்.ஆஸ்பத்திரியில் 15.04.2006 சனிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். மதியாபரணம், ஜெயபுரம் வடக்கு, கோவிற்குடியிருப்பு. (சி/49047)

## வாடகைக்குத் தேவை

யாழ்.நகர் திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் அறை வாடகைக்குத் தேவை. முதியவர்களுடன் வசிப்பதும், Annex ஆக இருப்பதும் விரும்பத்தக்கது. தொடர்பு: 0773152974 (49667)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆங்கிலத்தில் உச்சரித்து, வாசிக்க, எழுத திங்கள், புதன், 10A.M. சுலபமாகக் கதைக்கப் பயில திங்கள், புதன 11A.M. சனி, ஞாயிறு 3 P.M. புதிய பிரிவுகள். By.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (49662)(32-15-45)

## சமய சந்நிதிகளில்...

தென்மராட்சி,ஏப்.22

கச்சாய் மஞ்சள் கேணி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்றுவரும் மகாகும்பாபிசேக பூர்த்தி தின சங்காபிசேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (3-117-203)

★ ★ ★

சங்கானை,ஏப்.22

பொன்னாலை பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பொன்னம்பலவாணக் குருக்கள் தலைமையில் திருவிழா நடைபெறவுள்ளது. (3-29-203)

## விபத்தில் காயம்!

நவாலி,ஏப்.22

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் ந.ஜெயரட்ணம் பலத்த காயங்களுடன் யாழ்.அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் செம்மணி வீதியில் இவர் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தசமயம் நேர் எதிரே வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (3-100)

## மருத்துவர் சங்கத்தின் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்.மருத்துவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 6ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் என்.ரி.எஸ் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சங்கத்தின் உறுப்பினர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-202)

## உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு

கிளிநொச்சி,ஏப்.22

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான பொருளியல், கணக்கீடு, வணிகக் கல்வி ஆகிய பாடங்களுக்கான பரீட்சை வழிகாட்டலும் மீட்டல் செயலமர்வும் இன்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை பரந்தன் ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8மணிமுதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வில் வர்த்தகப்பிரிவு மாணவர்களைக் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த. குருகுலராசா அறிவித்துள்ளார். (8)

# இலங்கை அரசு

## வடக்கு - கிழக்கு மாகாண சபை

## வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்

## கடன் இலக்கம் - 2880 சி.இ.

## தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்

## (சிறிய குடிசார் வேலைகள்)

# கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி

ஐ.எவ்.பி. இல. ஜேஎ/நீர்ப்/சீஎல்ஜி/சீபி/09 திகதி 21.04.2006
ஜேஎ/நீர்ப்/சீஎல்ஜி/சீபி/10
ஜேஎ/நீர்ப்/சீஎல்ஜி/சீபி/11

1. வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனில் ஒரு பகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கேள்விதாரரிடமிருந்து நம்பிக்கையின் கீழான வசதி (IDA) என்ற வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

2. மாவட்டச்செயலாளர், யாழ்ப்பாணம் இலங்கை அவர்களினால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தகாரரிடமிருந்து பின்வரும் கட்டடத்தொகுதிகள் நிர்மாணிப்பதற்கு கோரப்படுகின்றன.

3. அட்டவணை

| ஐ.எவ்.பி இல | வேலை விவரம் | கேள்விப் பிணை ரூபா | கேள்வி ஆவணங்களின் பெறுமதி | வேலை முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 1.ஜேஎ/நீர்ப் /சிஎல்ஜி /சிபி/09 | வேலணைப் பிரதேச சபை அலுவலகக் கட்டடம் மீளமைத்தல் - கட்டம் II | 56,000/- | 800.00 | 04 மாதங்கள் |
| 2.ஜேஎ/நீர்ப் /சிஎல்ஜி /சிபி/10 | வலி. தென்மேற்கு பிரதேச சபை (மானிப்பாய்) அலுவலகக் கட்டடம் மீளமைத்தல் | 334,000/- | 800.00 | 09 மாதங்கள் |
| 3.ஜேஎ/நீர்ப் /சிஎல்ஜி /சிபி/11 | பிரதேச சபை உப அலுவலக கட்டடம் மீளமைத்தல்- அராலி | 27,000/- | 800.00 | 04 மாதங்கள் |

3.1. மீளளிக்கப்படாத கட்டணமாக காட்டப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு காசாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் மாற்றத்தக்கதான யாழ்.மாவட்டச் செயலாளரின் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) அல்லது தபால் அலுவலகத்தில் பெறப்பட்ட காசுக் கட்டளையாகவோ (Money Order) யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் பேரில் யாழ்ப்பாண.. பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் 22.05.2006 ஆம் திகதி பிற்பகல் 15 மணி வரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

3.2. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை பின்வரும் முகவரியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விவரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,**
**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,**
**பண்ணை, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி இல. 021 - 222 2654
தொலைநகல் இல. 021 - 2223410

4. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்தில் இருந்து 45 நாள்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப்பிணையையும் கேள்விகளுடன் இணைத்து **அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு 23.05.2006ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு முன்னர் கையளிக்கப்படல்வேண்டும். அதே தினம் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் அலுவலகம் மூடப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

5. கேள்விதாரர்கள் கேள்விகளுக்கான செயற்பிரமாணக் குறிப்புக்கள் 4ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக் குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டும் என இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்விப் பத்திரத்தில் உள்ள ஒப்பந்தங்களை வழங்கும்போது கேள்விதாரர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும் ஆளணியும் அனுபவமும் கொண்டவராக இருப்பதுடன் ஒரு தனி ஒப்பந்தகாரருக்குத் தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துபவராகவும் இருத்தல்வேண்டும்.

6. வேறு விவரங்கள் தேவைப்படின் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

**க.கணேஷ்**
*அரசாங்க அதிபர்,*
*மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*

**21.04.2006.** (சி-49051)(21-32-15-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டறைகள் நடத்திப் பேச்சுக்குத் தயாராகும் அரசு

# தலைமையுடன் தளபதிகள் பேச தடைவிதிப்பது ஏன்?



**நோர்வேயின் விசேட பிரதிநிதி ஜோன் ஹன்ஸன் போவருடன் நேற்றுமுன்தினம் பேச்சு நடத்தியபின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய செவ்வி.**

**கே:-** இரு தரப்புகளும் வன்செயல்களைக் கைவிடுவதற்கு இணங்கியுள்ளன என விசேட தூதுவர் போவர் கூறியுள்ளார். அது பற்றி உங்கள் கருத்து என்ன?

**ப:-** அவர்கள் இரு தரப்புகளையும், வன்முறைகளை நிறுத்தும்படி குறிப்பிட்டார்கள். நாங்கள் இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையை வரிக்கு வரி முழுமையாக நடைமுறைப்படுத்தவும் வன்முறைகளைக் கட்டுப்படுத்தவும் அது தொடர்பான சகல விடயங்களிலும் எமது தலைமைப் பீடம் ஒத்துழைப்பு வழங்கவும் தயாராக இருக்கின்றது என்பதைக் கூறினோம்.

ஆனால், நிலைமைகளைச் சீர்குலைத்து, இன்றைய மோசமான கட்டம் எட்டப்பட்டமைக்கு முழுப் பொறுப்பு இலங்கை அரசும், படைகளும்தான் என்பதைத் தெளிவுபடுத்தினோம். ஆகவே, அவர்கள் பக்கத்தில் இருந்து வன்முறைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தால், தமிழ் மக்கள் மத்தியில் உருவாகியுள்ள கொந்தளிப்பு நிலை கட்டுப்பாட்டுக்குள் வரும் என்று தூதருக்குச் சுட்டிக் காட்டினோம்.

**கே:-** கிழக்குத் தளபதிகளின் போக்குவரத்துக் குறித்து ..... ?

**ப:-** இந்த விடயம் குறித்துத் தெளிவாக விளக்கியுள்ளோம். எமது கிழக்குப் பிராந்தியத் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் இங்கு வந்து தலைமைப் பீடத்தைச் சந்தித்து இன்றைய நிலைமைகள் குறித்து கலந்துரையாடிய பின்தான் - ஜெனீவாப் பேச்சுத் தொடர்பான - முடிவுகளை எடுக்கலாம்.

முதலில் கிழக்குப் பிராந்தியத் தளபதிகள் எமது தலைவரைச் சந்திக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைப் பெற்றுத்தர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்.

அண்மையில் கடற் போக்குவரத்து ஏற்படுத்தப்பட்டது. அதில் எமது தளபதிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட அசௌகரியங்கள், அச்சுறுத்தல்கள் தொடர்பாக எடுத்து விளக்கினோம்.

அந்தச் செயன்முறை எமது தலைமைப் பீடத்தைச் சீற்றமுற வைத்துள்ளது. மிகவும் கவலையடைய வைத்துள்ளது. இப்படியான நடவடிக்கைகள் பாரதூரமான நிலையை ஏற்படுத்தும்.

எமது கிழக்குத் தளபதிகள் இங்கு வருவதாக இருந்தால் நூறு வீதப் பாதுகாப்பு உத்தரவாதம் இருக்க வேண்டும். அதற்கான நடைமுறைகள் பற்றி அவர்களுக்கு எடுத்து விளக்கியுள்ளோம்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை மாற்றியமைப்பதையோ, இதுவரை காலமும் இருந்த போக்குவரத்து நடைமுறைகளை மாற்றுவதையோ எமது தலைமைப் பீடம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது. இதை நோர்வேக்கு விளக்கியுள்ளோம்.

**கே:-** தனியார் 'ஹெலி' பற்றிப் பேசப்படுகிறதே. அது குறித்து ..... ?

**ப:-** தனியார் 'ஹெலி' தொடர்பாகவும் தற்போது ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற ஒழுங்கு முறை பற்றியும் அதிலுள்ள சந்தேகங்கள், நடைமுறைச் சிக்கல்கள் ஆகியன குறித்தும் அவர்களுக்குக் கூறியுள்ளோம். நோர்வேத் தரப்பு எல்லா விடயங்களையும் கேட்டறிந்துள்ளது. தொடர்ந்தும் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, நிலைமையைச் சீராக்கி அதற்கான சூழலை உருவாக்க முயல்வார்கள் எனக் கூறியுள்ளனர்.

**கே:-** கடல் மூலம் தளபதிகள் செல்லும் விடயத்தில் அச்சமயம் கடலில் கடற்படையினர் பிரசன்னமாக இருப்பதற்கு புலிகள் முதலில் இணங்கினார்கள் என்றும் பின்னர் அதை மறுத்து விட்டனர் என்றும் கூறப்படுவது குறித்து ........ ?

**ப:-** இது மிகவும் தவறு. இந்த இடத்தில் கண்காணிப்புக் குழுத் தலைவரைச் சந்தித்து விட்டு, என்ன விடயம் பேசப்பட்டது என்பதை ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்து இருந்தேன்.

கடற்போக்குவரத்தாக இருந்தாலும் அதில் கடற்படையின் ஈடுபாடோ, பிரசன்னமோ இருக்கக் கூடாது என்பதை கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு அறிவித்துள்ளோம் என்று ஏற்கனவே ஊடகவியலாளருக்கு பகிரங்கப் படுத்தியிருந்தேன்.

அவசரமான போக்குவரத்து ஒழுங்கு என்பதால் எழுத்து மூல கடிதப்பரிமாற்றங்களை உடன் செய்ய முடியாமல் இருந்தது. வாய்மூலமான உத்தரவாதங்களைத்தான் பேசினோம்; பெற்றோம்.

மீண்டும் மீண்டும் கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் உத்தரவாதங்களைப் பெற்றிருந்தோம். இந்த விடயம் பிழையாக அர்த்தப்படுத்தப்பட்டு செய்திகள் வெளியிடப்பட்டன. தவறாகப் புரிந்துள்ளீர்கள் என கண்காணிப்புக்குழுவுக்கு அறிவித்துள்ளோம்.

எங்களுடன் பேசிக் கொண்டதும், நடைமுறையில் நடந்து கொண்டதும் முரண்பாடானவை என்றும், இதற்கு எமது கவலையைத் தெரிவிக்கிறோம் என்றும் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு அறிவித்துள்ளோம்.

**கே:-** புலிகள் பேச்சுக்குப் போக மாட்டார்கள் என பேச்சு அடிபடுகிறதே! அது பற்றி......?

**ப:-** புலிகளைப் பொறுத்தவரையில், இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையை மதிப்பதிலும், சமாதான முன்னெடுப்புகளை நேர்மையாக முன்னெடுப்பதிலும் ஆர்வமாகத்தான் இருக்கிறார்கள். எமது தலைமைப்பீடம் அதில் மிகுந்த அர்ப்பணிப்போடு இருக்கிறது.

ஆனால், நிலைமையைச் சீர்குலைத்து, கள நிலைமையை மோசமாக்கி, எமது தாயகப் பிரதேசத்தில் வன்முறைச் சூழலை உருவாக்கி, யுத்த சூழலுக்குத் தள்ளுகின்ற போக்கை இலங்கை அரசும், படைகளும்தான் கடைப்பிடிக்கின்றன என்பதுதான் உண்மை.

புலிகள்மீது குற்றஞ்சுமத்துவது தவறானது. அரசுத் தரப்பினரோ, அரசுத் தலைவர்களோ தாங்கள் ஜெனீவாவுக்குப்போக ஆயத்தமாக இருக்கிறார்கள் எனவும், ஜெனீவாவுக்குப் புலிகளை கொண்டுபோக முயற்சிக்கிறார்கள் எனவும் கூறிக்கொண்டிருக்கிறார்கள். அதேநேரம், மறுபக்கத்தில் நிலைமையை மோசமாக்கி ஜெனீவாப் பேச்சுக்கு எம்மைச் செல்லவிடாது தடுப்பதில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதில் ஒன்று - நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் வன்முறைகள், கொலைகள். மற்றொன்று - எமது தளபதிகள் தலைமையைச் சந்திக்க விடாது தடுத்து, தலைமைப்பீடம் சில முடிவுகளை எடுக்க முடியாத அளவுக்கு நெருக்குவாரங்களை உருவாக்குவது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையைப் பேணாமல், பேச்சுக்கு செல்வதற்கு சர்வகட்சி மாநாடு, கட்சித் தலைவர்கள் சந்திப்பு, கலந்துரையாடல், பட்டறை எனப் பலவற்றை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் அவர்கள். ஆனால், அதேநேரம் எங்கள் தலைவர் எமது பிராந்தியத் தளபதிகளையும், பொறுப்பாளர்களையும் சந்தித்துத் தீர்மானம் எடுக்கவிடாதமை என்பது எந்த விதத்தில் நியாயம் என்று நோர்வேயிடம் கேட்டோம்.

எமது போராளிகளை முடக்கி, முற்றுகைக்குள் வைக்கும் நடவடிக்கையாகவே இதைப் பார்க்கிறோம்.

**கே:-** தனியார் ஹெலி மூலம் பயணிப்பது குறித்து....?

**ப:-** அந்தப் பயணத்திலுள்ள பாதுகாப்பு நடைமுறைகள், நெருக்கடிகள், பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துக் கூறியுள்ளோம். இது பற்றியவிடயங்களை சம்பந்தப்பட்டோரோடு தாம் கலந்துரையாடிவிட்டு இவ்விடயம் தொடர்பான முடிவுகளைத் தெரிவிப்பார்கள் எனக் கூறியுள்ளார்கள் நோர்வேத் தரப்பினர். அதுவரை எங்களைப் பொறுமை காக்கும்படி கேட்டுள்ளார்கள்.

**கே:-** தொடர்ச்சியாக மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்க இப்படிப் பொறுமைகாப்பதன் அர்த்தம் என்ன?

**ப:-** பொதுமக்கள் பொறுமையிழந்து விட்டார்கள். மக்கள் மீது அரசும், படைகளும் படுகொலைகளைப் புரிந்துகொண்டிருக்கும்போது மக்கள் தங்கள் பொறுமையை இழந்த நிலைமைதான் இப்போது இருக்கின்றது. அதனால்தான் இராணுவத்தின் மீதான எதிர்த்தாக்குதல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதைத் தவறாக - புலிகள் மீது தாம் சந்தேகிக்கின்றார் என்ற சாரப்பட - கண்காணிப்புக் குழுத் தலைவர் கருத்து வெளியிட்டுள்ளார். இதுபற்றி நோர்வேக்குச் எடுத்து விளக்கினோம்.

எங்களுடைய மக்களைப் பொறுத்தவரையில், புலிகளும், மக்களும் இணைந்து போராடித்தான் பெரிய வெற்றிகளை ஈட்டி, பெரிய பிரதேசங்களை மீட்டு. ஒரு பகுதி மக்களுக்காவது நிம்மதியான சூழலைக் கொடுத்திருக்கிறோம். மக்களும் இணைந்துதான் இதைச் செய்தனர்.

ஆகவே, மக்களை இவர்கள் கொத்துக் கொத்தாகப் படுகொலை செய்து கொண்டிருக்க மக்கள் பொறுமை காத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். மக்களும் தங்களின் இவ்வளவு காலப் போராட்ட அறிவையும், அனுபவத்தையும் வைத்துத் தங்களைத் தற்காத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுப்பார்கள்.

மக்களைப் பொறுமை இழக்கச் செய்தது இலங்கை அரசும், படைகளும்தான்.

**கே:-** இந்தச் சந்திப்பின் பின் வன்முறைகள் நிற்குமா?

**ப:-**வன்முறைகளில் சம்பந்தப்பட்டவர்கள்தான் முடிவு சொல்லவேண்டும். இன்னமும் வன்முறைகளுக்கு - அதாவது யுத்த நிறுத்தத்திலிருந்து விலகவோ, வன்முறைகளைத் தொடக்கவோ - புலிகள் காரணமானவர்களாக இருக்கவில்லை. ஆகவே, இந்த நிலையில் எந்த உத்தரவாதத்தையும் புலிகள் தரமுடியாது.

இராணுவம்தான் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவித் தாக்க முயன்று கொண்டிருக்கின்றது. தாக்குதலைச் செய்து கொண்டிருக்கும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் மக்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

வன்முறையைக்கட்டவிழ்த்து விட்டு எம்மைப் பார்த்து வன்முறைகளை நிறுத்துங்கள் எனக் கேட்பது பொருத்தமற்ற விடயம்.

ஜெனீவாப் பேச்சுக்கோ, சமாதான முயற்சிக்கோ, யுத்த நிறுத்த சூழலுக்கோ விரோதமானவர்கள் நாங்கள் அல்லர். முழுக்க முழுக்க அரசும், படைகளும்தான் காரணம். ஆகவே, எம்மிடம் அல்ல. அரசிடமும், படையினரிடமுமே உத்தரவாதங்களைப் பெறும்படி நோர்வேயிடம் கூறியுள்ளோம்.

**கே:-** இதுவரைகாலம் ஏற்பட்ட இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்தாத நிலையில் இனியும் உத்தரவாதங்கள் நிறைவேற்றப்படும் என நம்புகிறீர்களா?

**ப:-** எமக்கு நம்பிக்கை இல்லை. சர்வதேச சமூகமும், நோர்வே அனுசரணையாளர்களும் முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ ஒரு வகையில் நம்பிக்கைகளைக் கட்டி எழுப்பி இணக்கப்பாடான தீர்வை ஏற்படுத்துவதற்கு முயன்று கொண்டிருக்கிறார்கள்.

ஒரு தரப்பு என்ற ரீதியில் தமிழ்மக்களும் எமது தலைமையும் அதற்கான அர்ப்பணிப்பையும் ஈடுபாட்டையும் முழுமையாக வழங்குகின்றனர்.

ஆனால், அரசுத்தரப்பில் இருந்துதான் இதற்கு உத்தரவாதம் கிடைக்கவேண்டும். என்ன வகையான உத்தரவாதம் கிடைக்கும் என்பதுதான் கேள்விக் குறியாக உள்ளது - என்றார். (க)

# புலிகளின் சதித்திட்ட நடவடிக்கையே சமீபத்திய வன்முறைச் சம்பவங்கள்

## அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல கருத்து

கொழும்பு, ஏப்.22

இலங்கையில் இனப்பிரச்சினை ஒன்று இருக்கிறது என அரசு தமிழர்கள் மீது இனரீதியான தாக்குதல்களை நடத்திவருவதாகவும் சர்வதேசத்திற்குத் தெரிவிக்கும் ஒரு சதித்திட்டத்துடனேயே புலிகள் செயற்பட்டு வருகின்றனர்.

இம்மாதம் 7ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை புலிகள் நடத்திய தாக்குதல்களில் அதிகமான பொதுமக்கள் மரணித்துள்ளனர். இத்தாக்குதலின் பின்னணி சர்வதேச மட்டத்தில் அரசுக்கு அபகீர்த்தியை உண்டுபண்ணுவதே. அரசு ஒருபோதும் இனரீதியான தாக்குதலில் ஈடுபடவில்லை.

இவ்வாறு அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள தகவல் திணைக் களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போது கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்:-

இம்மாதம் 7ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது 48 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களுள் 24 பேர் பொதுமக்களாவர்.

55 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களுள் 19 பேர் பொதுமக்களாவர். அத்தோடு திருமலைச் சம்பவத்தின்போது 31கடைகளுக்குத் தீ வைக்கப்பட்டதாகவும் அவற்றுள் 30 கடைகள் தமிழ் - முஸ்லிம்களுக் குச் சொந்தமானவை என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இது முற்றிலும் பொய். சர்வதேச மட்டத்தில் அரசை ஓர் இனவாத அரசாகக் காட்ட புலிகள் முயற்சிக்கின்றனர். அரசு, புலிகளின் இந்த திட்டத்தை முறியடித்துவிடும்.

அதற்கு ஏதுவாக புலிகளால் இத்தகைய தாக்குதல் மேற்கொள்ளப்பட்டும் - படையினரும் பொதுமக்களும் கொல்லப்பட்டும் கூட அரசு பொறுமையாக உள்ளது. சமாதானத்தை ஏற்படுத்துவதிலேயே அரசு குறியாயிருக்கிறது.

திகதி குறிக்கப்பட்டதன்படி 2ஆம் கட்ட ஜெனீவாப் பேச்சில் கலந்துகொள்ள அரசு தயாராக இருக்கிறது. மேலும் பொறுமை காத்து புலிகளைப் பேச்சுக்கு அழைத்துச்சென்று நாட்டில் நிரந்தர அமைதியை உருவாக்குவதே அரசின் திட்டம்.

புலிகள் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்துகிறார்கள் என்பதற்காக பதிலுக்கு அரசால் தாக்குதல் நடத்தமுடியாது. ஓர் அரசு என்றவகையில் எமக்குப் பொறுப்புகள் நிறைய உண்டு. நாட்டையும் இந்நாட்டு மக்களையும் பாதுகாக்கவேண்டும். அதைத்தான் நாம் செய்துகொண்டிருக்கிறோம். அந்த வகையில் நாம் வெற்றியும் கண்டுள்ளோம்.

நாம் பேச்சில் கலந்துகொள்ள உறுதியாக இருப்பதுபோல், புலிகளும் உறுதியாக இருக்க வேண்டும் என்றே அரசு விரும்புகிறது. புலிகள் பேச்சை நிராகரிக்கமாட்டார்கள் என்பதனை நாமும் நம்புகிறோம்.

இருந்தும் பேச்சை நடத்துவதற்கான அத்தனை முயற்சிகளையும் அரசு மிகவும் அர்ப்பணிப்புடனும் தியாகத்துடனும் மேற்கொள்ளும் - எனக் கூறினார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வங்கியின் யாழ். 2ஆம் கிளையில் புதுவருடத் தினத்தன்று சிறுவர் சேமிப்பு கணக்குகளுக்கான காப்புறுதி நன்மையில் அன்பளிப்பாக இருவருக்கு ஒன்பது லட்சம் ரூபா வழக்கப்பட்டது. அத்துடன் வாடிக்கையாளர் இருவருக்கு குத்தகை அடிப்படையில் இரண்டு வாகனங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் எஸ்.அருமைநாயகம் அன்பளிப் புத் தொகையினை வழங்குவதையும் - வழங்கப்பட்ட வாகனங்களுடன் வங்கியின் அதிகாரிகள் நிற்பதையும் படங்களில் காணலாம். *( படங்கள்: மதுபாலா)*

## வடக்குக் கிழக்கு சதுரங்கச் சுற்றுப்போட்டி

இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தால், வடக்குக் கிழக்கு ரீதியில் திறந்த சதுரங்கச் சுற்றுப்போட்டி நாளை 23.04.2006 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது. வடக்குக் கிழக்கில் உள்ள சதுரங்க வீரர்களை இணைத்து வடக்குக் கிழக்கில் சதுரங்க விளையாட்டை விருத்திசெய்யும் முயற்சியின் முன்னோடியாக இப்போட்டி நடத்தப்படுகிறது. சதுரங்க வீரர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் இப்போட்டியில் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம் அனைத்துப் போட்டியாளர்களும் சதுரங்கப் பலகையைக் கொண்டு வருவது நன்று.

இடம்: **இளையோர் செயற்பாட்டு நிறுவனம்,**
ஏ9 வீதி, கிளிநொச்சி.
காலம்: காலை 8.30 மணி
தொடர்பு: தொ.இல. 021 228 5974
E.mail r-rahavaa@hotmail.Com.
(சி-49037)(21.15.45)

## நாயனார் குருபூசை

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும், திருநாவுக்கரசு நாயனார் பற்றிய உரையும் இடம்பெறவுள்ளன.

(3-203)

* * *

தென்மராட்சி,ஏப்.22

சாவகச்சேரி சிவன் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசை நடைபெறவுள்ளது.

அன்று காலை 6 மணி தொடக்கம் திருநாவுக்கரசு நாயனாரால் அருளப்பட்ட தேவாரங்கள் இசைக்கப்படவுள்ளன. (3-117-203)

## கொழும்பு நகரில் கமரா பொருத்த பொலீஸார் திட்டம்

கொழும்பு, ஏப். 22

கொழும்பு நகர்ப் பகுதியில் நடைபெறுகின்ற பயங்கரவாத செயற்பாடுகளைக் குறைக்குமுகமாக குறிப்பிட்ட சில பிரதேசங்களில் அதி நவீன தொழிநுட்பக் கமராக்களைப் பொருத்த பொலீஸ் மா அதிபர் பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கோரியுள்ளார் எனப் பொலீஸ் அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகருக்குள் வரும் வாகனங்களையும் வெளியேறும் வாகனங்களையும் இனங்காண முடிவதுடன், பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடும் குழுவினரையும் அதிலிருந்து தப்பிச் செல்லும் வாகனங்களையும் அறிந்து இதன்மூலம் சட்ட நடவடிக்கைகள்எடுக்க முடியும் என்று மேற்படி பொலீஸ் அதிகாரி கூறியதுடன் போக்குவரத்து விதிகளை மீறும் வாகனச் சாரதிகளுக்கெதிராக நடவடிக்கைகள் எடுக்கமுடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உலகின் பிரதான நகரங்களிலும் இதுபோன்ற அதிநவீன கமராக்கள் இணைக்கப்பட்டுள்ளதன் காரணமாக குற்றச்செயல்கள் பெருமளவு குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது எனவும் அவர் தெரிவித்தார். (சு)

## கேள்வி அறிவித்தல்

ஜி.ரி.சற் (G.T.Z) இனால் நிதியளிக்கப்பட்ட சுனாமி அனர்த்த புனர்நிர்மாண மீள்கட்டுமான பின்வரும் அபிவிருத்தி வேலைகள் செய்வது தொடர்பான கேள்விகள் கேள்விச் சபைத் தலைவரும் அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளருமான என்னால் 24.04.2006 தொடக்கம் 05.05.2006 பிற்பகல் 3 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். அதேதினம் 3.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்துமூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

| வேலையின் பெயர் | இக்ராட் தரம் | கேள்வி வைப்புப் பணம் ரூபாவில் | கேள்விப் பத்திரப் பணம் ரூபாவில் |
|---|---|---|---|
| 1. பலநோக்கு சனசமூக நிலைய கட்டடம் (மணற்காடு) | எம்.7 | 264,000 | 800 |
| 2. பொதுச் சந்தையும் கடைத் தொகுதியும் (மணற்காடு) | எம்.6 | 140,000 | 800 |
| 3. சிறுவர் விளையாட்டு மைதானம் (மணற்காடு) | எம்.5 | 23,300 | 500 |

1. மேற்படி வேலைகளுக்கமைவாகக் கேள்விப்பத்திரப் பணத்தைத் தங்களுக்கு வசதியான அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிட்டு அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் என்ற பெயரில் வங்கிக் கட்டளையைப் பெற்று (Pay Order ) அரசாங்க அதிபரின் காரியாலயமாகிய மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் சமர்ப்பித்து 24.04.2006 தொடக்கம் 05.05.2006 ஆம் திகதி பிற்பகல் 3 மணி வரை கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. மேற்படி வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியும் இணைப்பிரதியையும் தனித்தனிக் கடித உறைகளில் இடப்பட்டு உறைகளின் இடது பக்க மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியாக உறைகளில் இடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இரண்டையும் பிறிதோர் உறையில் இட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரே முத்திரையிட்டு **அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரியிட்டு மாவட்டச் செயலம், யாழ்ப்பாணத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் 05.05.2006 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
3. மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
4. கேள்விச் சபையால் தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர் தெரிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து ஐந்து வேலைநாள்களுக்குள் கேள்விச் சபைத் தலைவருடன் வேலைக்கான ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டு உரிய வேலையைப் பூர்த்திசெய்து கையளித்தல் வேண்டும். எதுவித காலதாமதமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
5. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் பார்வையிடுவதுடன் இந்த வேலைகள் தொடர்பான ஆவணங்களை குறிப்பிடப்பட்ட காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறியத் தருகின்றேன்.

**க.கணேஷ்**
*அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளரும்,*
*கேள்விச் சபைத் தலைவரும்,*
*யாழ்ப்பாணம்.*

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
2006.04.20

(சி-49043)(21.15.45)

## பிற்போடப்பட்டுள்ளது

*யாழ்.றோட்டறிக்கழகத்தால் 23.04.2006இல் நடத்தப்பட இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் 23.05.2006 இற்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை தெரியப்படுத்துகின்றோம்.*

**- யாழ்.றோட்டறிக்கழகம்.**

(சி-49041)(21.15.45)




உ
சிவமயம்

**ஸ்ரீ விநாயக ஜோதிடம்**

| குரு | செவ். | சுக். | புதன் |
|---|---|---|---|
| சனி | | | சந். |
| சனி | | | ராகு |
| குரு | செவ். | சுக். | புதன் |



V.நாகராசு சுவாமிகள்
N. முனியம்மா T.P.: 077 9582596

துர்க்காம்பாள் வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ்பெற்ற மாந்திரீக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. இப்போது இலங்கையில் ஜாதகம், கைரேகை பார்த்து பலன் சொல்வார். கணவன் மனைவி சண்டை, வெளிநாட்டுப் பிரயாணம், பிரிவு, காதல் திருமணம் தடை, இதுவரை திருமணமே ஆகாதவர்கள், பிள்ளைகள் சொல்கேளாமல் திரிவது, படிப்பில் அக்கறை இல்லாமல் இருப்பது, வேலை தொழில் உத்தியோகம் இப்படி பலவாறான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார். செய்வினை, பில்லி சூனியத்தால் பாதிப்பு, பொறாமையில் தொழில் பாதிப்பு, திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றுக்கு பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார்.

தமிழ்மொழியில் சொல்லப்படும் (ஆந்திரா மாந்திரீகர்) நீங்கள் பல ஜோதிடரை நம்பி ஏமாந்திருக்கலாம். அதேபோல் எங்களையும் எண்ண வேண்டாம். எங்களிடம் ஒருமுறை விஜயம் செய்யுங்கள். மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நாங்கள் மேலும் இங்கே தங்க எண்ணியுள்ளோம். ஆகவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

**V.நாகராசு சுவாமிகள்**
*"பிள்ளையார் இன்",*
*31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்,*
*T.P.: 077 9582596* Room No: 05

(49659)(21.15.45)

**AIMS**
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
Your Training Partner

Aim 01: Microsoft Office
Introduction, Word, Excel, Access, PowerPoint.
Morning& Evening Batches
Morning : 9.30 am
Evening : 3.30 pm

Fast Track
1500/-
பதிவுகளுக்கு முந்துங்கள்
Starts on 24/04/06

Introduction, Generation & Types, Components, Assembling, Basic DOS Commands, O/S Installation, Setup & Configuration.

Aim 02: Computer Hardware

10 நாள்கள் மட்டும்

Director AIMS
#118, பலாலி வீதி,
தபால் பெட்டிச் சந்தி அருகில்,
திருநெல்வேலி

Center for FOSS & LAMP


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி தயாரதி
அவர்களின் துணைவர்

அமரர்

**கந்தசாமி கௌரிபாலன்**

(மாநகரசபை, யாழ்ப்பாணம்)

அவரின் பிரிவால் துயருறுகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
**கிளி/இராமநாதபுரம் மேற்கு, அ.த.க.பாடசாலை, வட்டக்கச்சி.**

(சி-49038) (30.15.45.21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களப் பேரினவாதத்தின் கொலைகளை நினைவுகூருவது மிகவும் முக்கியமானது

## பொதுமக்கள் நினைவுத்தூபி திறப்புவிழாவில் தங்கன் உரை



ஸ்கந்தபுரம்,ஏப்.22

போரைத் தமிழ்மக்கள் மீது திணித்துச் சிங்களப் பேரினவாதம் புரிந்த படுகொலைகளை நினைவுகூருவது முக்கியமானது.

- இவ்வாறு கடந்த புதன்கிழமை நடைபெற்ற பொதுமக்கள் நினைவுத் தூபித் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்தார்.

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் ஸ்ரீலங்கா, இந்தியப்படைகளால் படுகொலை செய்யப்பட்ட மக்கள் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபி கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அன்னை பூபதியின் பதினெட்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி இத்தூபி திறந்துவைக்கப்பட்டது.

கிராம அலுவலர் எஸ்.மகேந்திரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைத்து சோ.தங்கன் ஆற்றிய உரை வருமாறு:-

போர்க்காலத்தில் எமது மக்கள் பல துன்பங்களைச் சந்தித்து தமது உயிர்களை அநியாயமாக இழந்திருக்கின்றார்கள்.

அந்த மக்களின் நினைவுகளைத் தாங்கக்கூடிய நினைவுச் சின்னங்கள் எமது தாயகத்தில் தோற்றுவிக்கப்படவேண்டும் - என்றார் தங்கன்.

நிகழ்வில் காவல்துறைப் பொறுப்பாளர் ஜீவானந்தம், அரசியல்துறைப் போராளி பசுபதி, இரண்டு மாவீரர்களின் தந்தை பேரம்பலம் ஆகியோர் பொதுச்சுடரை ஏற்றினர்.

ஈகச்சுடரை மாவீரர் பணிமனை நிர்வாகப் பொறுப்பாளர் இனியவன் ஏற்ற, மலர்மாலையைக் கரும்புத் தோட்ட முகாமையாளர், கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி ஆகியோர் அணிவித்தனர்.

தமிழீழ அரும்பொருள் காப்பகப் பொறுப்பாளர் டானியல் நாடாவை வெட்டி நினைவுத் தூபியைத் திறந்துவைத்தார்.

அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் நினைவுத் தூபியின் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

அக்கராயன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் கல்வெட்டினைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

(8-381) (24)

# பூநகரிப் பிரதேசத்தில் சிறுபோக நெற்செய்கை

பரந்தன்,ஏப்.22

பூநகரிப் பிரதேசத்தில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பூநகரிப் பிரதேசத்திலுள்ள கரியாலை நாகபடுவான் குளத்தில் இவ்வாண்டு 500 ஏக்கர் நிலத்தில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதெனவும் 13 ஏக்கர் நிலத்தில் உப உணவு மற்றும் சிறுதானியப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதெனவும் அண்மையில் நடைபெற்ற பயிர்ச்செய்கைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது

அத்துடன், தண்ணீர்ப் பங்கு அணைக்காமல் மேலதிகமாக அடாத்துப் பயிர்ச்செய்கை மேற்கொண்டால் ஒரு ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடுதெனவும் இதில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(8-352)

# ஐயன்குளம் திலீபன் மருத்துவமனையின் நான்காம் ஆண்டு நிறைவு விழா

முல்லைத்தீவு,ஏப்.22

முல்லைத்தீவு ஐயன்குளம் தியாகதீபம் லெப்.கேணல் திலீபன் மருத்துவமனையின் நான்காம் ஆண்டு நிறைவு விழா கடந்த 18ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு நடைபெற்றது. மருத்துவமனை வளாகத்தில் ஐயன்குள பாடசாலை அதிபர் தர்மபூபதி தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் பொதுச்சுடரை மருத்துவ முனைவர் அருந்ததி ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை மருத்துவப் பிரிவு மகளிர் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். தியாகி அன்னை பூபதி, தியாகதீபம் திலீபன் ஆகியோரின் திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடர்களை மல்லாவிப் பிரதேச மாணவர் அமைப்பு பொறுப்பாளர் மூவேந்தன், மல்லாவிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். திருவுருவப் படங்களிற்கான மலர்மாலைகளை இரு மாவீரர்களின் பெற்றோர்கள் அணிவித்தனர்.

தொடர்ந்து உரைகளை மல்லாவி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் அமிர்தலிங்கம், ஐயன்குளம் பிரதேச் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளரும் கிராம முன்னேற்றத் தலைவருமான தங்கராஜா, துணுக்காய் பிரதேச செயலாளர் நந்தகுமார் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையை மல்லாவிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் நிகழ்த்தினார்.

தொடர்ந்து ஐயன்குளப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பேபி ஆசிரியரின் நெறியாள்கையில் உருவான நவம் அறிவுக்கூடப் போராளிகளின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஐயன்குளம், புத்துவெட்டுவான், மருதன்குளம், பழைய முறிகண்டி, தேறாங்கண்டல் உள்ளிட்ட கிராமங்கள் தமக்கான மருத்துவ வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தன. கடந்த 2002ஆம் ஆண்டு தியாகதீபம் திலீபன் மருத்துவமனை இத்தேவையை நிறைவுசெய்தது.

இதற்கான நிரந்தரக் கட்டடத்தை புலம்பெயர் வாழ் ஈழத்தமிழரான இராஜரட்ணம் குடும்பத்தினர் அமைத்துக் கொடுத்துள்ளனர். இதன் திறப்புவிழா நிகழ்வு இவ்வருட முற்பகுதியில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

(8)(22)

# தமிழீழ மாணவர் அமைப்பினால் நடத்தப்படும்

# புதுக்குடியிருப்புக் கணனி நிலையத்தின் 4ஆம் பிரிவுக்கான சான்றிதழ் வழங்கல்

புதுக்குடியிப்பு,ஏப்.22

தமிழீழ மாணவர் அமைப்பினால் நடத்தப்படும் புதுக்குடியிருப்புக் கணனிப் பயிற்சி நிலையத்தின் நான்காம் பிரிவுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த 16ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.செம்மணன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தியாகி பொன்.சிவகுமாரின் திருவுருவப் படத்திற்குத் தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் செ.முகுந்தன் சுடர் ஏற்றி மலர்மலை அணிவித்தார்.

மேஜர் முரளியின் திருவுருவப் படத்திற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

அன்னை பூபதியின் திருவுருப் படத்திற்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் சி.சுப்பிரமணியேஸ்வரன் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து மண்டபத்தில் நிகழ்வுகள் ஆரம்பமானது. மழைலைகள் கணனிப் பூங்கா மாணவரின் மாவீரர் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.செம்மணன், வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் ஆகியோர் உரையாற்றினார்கள்.

சான்றிதழ்களை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. செம்மணன் ஆ,கியோர் வழங்கிக் கௌரவித்தார்.

(8-353)(22)




# பொதுநோக்கு மண்டபம் அமைக்க அடிக்கல்

பரந்தன்,ஏப்.22

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு கள்ளப்பாடு தீர்த்தக்கரை கிராமத்தில் முன்பள்ளியுடன் இணைந்த பொதுநோக்கு மண்டபம் ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த 17ஆம் திகதி நடைபெற்றது.

மண்டபத்துக்கான அடிக்கல்லை ஹொலண்ட் மனித உரிமைகள் மையத்தைச் சேர்ந்த இந்திரன் நாட்டினார். தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, சுனாமி வேலைத்திட்டப் பணிப்பாளர் றெஜி ஆகியோரும் அடிக்கல் நட்டுவைத்தனர்.

இக்கட்டடம் அமைக்கப்படவிருக்கும் கள்ளப்பாடு கிராமமானது ஆழிப் பேரனர்த்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்டதொரு கிராமம் என்பது குறிப்பிடத்தக்கது. (8-352)(21)

# உணவு பதனிடும் பயிற்சி நிலையம் மன்னார் இலுப்பைக்கடவையில் திறப்பு

மன்னார்,ஏப்.22

மன்னார் மாவட்டப் பொருண்மிய மதியுரையகத்தினால் ஐ.எல்.ஓ. நிறுவனத்தின் நிதியுதவியுடன் இலுப்பைக்கடவை பிரதேசத்தில் உணவு பதனிடல் பயிற்சி நிலையம் கடந்த 18ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

இப்பதனிடல் பயிற்சி நிலையம் சிற்றுண்டி வகை, உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் நோக்குடன் இக்கிராமத்தில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட யுவதிகளைத் தெரிவுசெய்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் நோக்குடன் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஜசிகரன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச்சுடரைப் பொருண்மிய மதியுரையகத்தின் நிர்வாகப் பொறுப்பாளர் வையகன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை இலுப்பைக்கடவைப் பிரதேசப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது. உணவு பதனிடல் பயிற்சி நிலையத்தினைப் பொருண்மிய மதியுரையகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சி.சுகுணன் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

பயிற்சியாளர்களுக்குரிய சீருடைகள் பயிற்சியாசிரியரினால் வழங்கப்பட்டு பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. கருத்துரைகளை ஐ.எல்.ஓ. கள இணைப்பாளர் பத்மதனேஸ், கிராம அலுவலர், கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர், பயிற்சியாசிரியர் ஆகியோர் வழங்கினர். சிறப்புரையைப் பொருண்மிய மதியுரையகத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் சி.சுகுணன் நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது. புதிய பயிற்சி நிலையக் கட்டடத்திற்கான அடிக்கல்லை ஐ. எல். ஓ. கள இணைப்பாளர் பத்மதனேஸ், பொருண்மிய மதியுரையகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுகுணன், கணக்காளர் நேசநாதன், கிராம அலுவலர், மாவட்ட இணைப்பாளர் ஜசிகரன் ஆகியோர் நட்டுவைத்தனர். மன்னார் மாவட்டத் திட்ட இணைப்பாளர் ஜெயக்குமாரின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன. இதில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்களும் கலநதுகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். (8) (24)

# மல்லாவி வைத்தியசாலையில் பற்சிகிச்சை நடைபெறும்

மல்லாவி,ஏப்.22

மல்லாவி அரசினர் வைத்தியசாலையில் ஒவ்வொரு மாதமும் முதலாவது செவ்வாய்க்கிழமைகளில் பற்சிகிச்சை நடைபெறும் என வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

நீண்டகாலமாக மல்லாவி பிரதேசத்தில் பற்சிகிச்சை வசதி இல்லாதிருந்த குறையை நிவர்த்திசெய்யும் முகமாக தமிழீழ சுகாதார சேவையின் நடமாடும் மருத்துவசேவையினரால் இப்பற்சிகிச்சை முகாம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (8-322) (24)

# முதலுதவித் தேர்வில் தோற்றியோருக்கு

மல்லாவி,ஏப்.22

தமிழீழ சுகாதார சேவைகளால் தாயகப் பிரதேசமெங்கும் மார்ச் மாதம் நடத்தப் பட்ட முதலுதவித் தேர்வில் 97 பேர் சித்தியடைந்துள்ளனர்.

அவர்களுக்கான பெறுபேறுகளை உரிய தியாக தீபம் திலீபன் மருத்துவமனைகளிலும் தமிழீழ சுகாதார சேவைகளின் மாவட்டப் பணிமனைகளிலும் பார்வையிடலாம் எனத் தமிழீழ சுகாதார சேவைகளின் நடுவப் பணிமனை அறிவித்துள்ளது. (8-322)



கடந்த புதன்கிழமை கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் பொதுமக்கள் நினைவுத் தூபி திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தேசியக் கொடி ஏற்றுவதையும் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி மலர்மாலை அணிவிப்பதையும் தமிழீழ அரும்பொருள் காப்பகப் பொறுப்பாளர் டானியல் தூபியை நாடாவெட்டித் திறந்துவைப்பதையும் தூபியின் பெயர்ப்பலகையையும் படங்களில் காணலாம்.

(8-381) (22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவிற்கான மத்தியஸ்தர்சபை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. மத்தியஸ்தர் சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர் ஒருவருக்கான நியமனக் கடிதத்தை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் அருட்திரு எஸ்.யேசுதாஸ் அடிகளார் கையளிப்பதை முதலாவது படத்திலும், மத்தியஸ்தர்சபை அங்கத்தவர்களை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

# திருமலை இனக்கலவர உண்மையை கண்டறிய `சுதந்திர விசாரணைக்குழு!

## அரசிடம் தேசிய சமாதானப் பேரவை கோரிக்கை

கொழும்பு,ஏப்.22

திருகோணமலையில் நடந்த இனக் கலவரம் தொடர்பாக விசாரித்து அதன் பின்னணிகளையும், தாற்பரியங்களையும் கண்டறிய வேண்டும். எனவே, இதற்காக சர்வதேச பங்களிப்புடன் கூடிய சுதந்திர விசாரணைக்குழுவொன்றை நியமிக்குமாறு இலங்கை தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்தை அறிக்கை யொன்றின் மூலம் கோரியுள்ளது.

தற்போது வடக்கு - கிழக்கில் நடைபெறும் வன்செயல் சம்பவங்கள் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் மிகவும் தீவிரமான முறையில் விசாரணை நடத்தி உண்மைகளை வெளிக் கொண்டு வரவேண்டும் என்றும் பேரவை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவைக் கேட்டுள்ளது.

வன்செயல்கள் தொடர்பாகப் பரவும் வதந்திகள் காரணமாகவும், மீண்டும் மீண்டும் வன்செயல்கள் வெடிக்கலாம் என்ற எதிர்பார்புகள் நிமித்தமும் மக்களுக்கு இடையிலான தொடர்புகள், உறவுகள் முறிந்து போயுள்ளன. இதனால், உண்மை விவரங்கள் வெளிவருவதும் இல்லை என்றும் பேரவை சுட்டிக் காட்டியுள்ளது.

முதலாவது ஜெனிவா சுற்றுப்பேச்சு மக்களுக்குப்பெரும் நம்பிக்கையை தந்தது. ஆனாலும், சமீபத்திய வன்முறைகள் சமாதானத்தின் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை நிர்மூலமாக்கிவிட்டது. மீண்டும் ஒரு ஆயுத மோதலுக்கு நாடு முகம் கொடுப்பதை மக்கள் விரும்பவில்லை.

அப்படியான ஒரு மோதலுக்கு இடமளிப்பது நாட்டை பேரழிவுக்கே தள்ளிவிடும்.

கிழக்குத் தளபதிகளின் வன்னிப் பயணத்தக்குத் தனியார் 'ஹெலி' போக்குவரத்துக்கு அரசு அனுமதி தந்திருக்கிறது. எனவே, விடுதலைப் புலிகள் அரசின் இந்த ஏற்பாட்டைப் பயன்படுத்தி அடுத்த சுற்று ஜெனிவாப் பேச்சு நடைபெறுவதை புலிகள் உறுதிப் படுத்த வேண்டும் என்றும் பேரவை தனது நீண்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கில் நடைபெறும் வன்செயல்களையிட்டு பேரவை கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளது.

### பொலீஸ் அதிகாரி கைது

விபத்துச் சம்பவமொன்றின் விசாரணைகளைத் தளர்த்துவதற்காக 8, 000 ரூபா லஞ்சம்பெற முயன்ற முந்தல் போக்குவரத்துப் பொலீஸ் அதிகாரி ஒருவர் முந்தல் பொலீஸாரால் கைதுசெய்யப் பட்டுள்ளார்.

கடந்த செவ்வாயன்று முந்தல், மந்துரெலிய பகுதியில் நடந்த விபத்து விசாரணையைத் தளர்த்துவதற்காக இவர் கப்பம் வழங்குமாறு கோரியிருந்தார்.

(க)


இலங்கை மின்சார சபை மூலம்

**இலகு தவணையில் CFL பல்புகள் விநியோகம்**

**உண்மையான தரமுள்ள CFL வாங்க ஒரே ஒரு**

யாழ்ப்பாணம், கொக்குவில் மின்சார **வழி**யின் பிரதேச பிரிவுகளில் உள்ள மின்சார பாவனையாளர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!!!

உயர்தர, உண்மையிலேயே 80% மின்சாரத்தைச் சேமிக்கும் CFL பல்புகளைப் பெற்றுக் கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம் காத்திருக்கிறது.



★ எந்தவித முற்கொடுப்பனவும் தேவையில்லை
★ வட்டி எதுவுமின்றிய, மிக இலகு தவணை முறை
★ ஒரு வருட உத்தரவாதம்
★ SLS சான்று பெற்ற பல்புகள், ISO 9000 சான்றுபெற்ற அமைபத்தின் உற்பத்தி.

**விநியோக நிலையங்கள்:**
1. இலங்கை மின்சார சபை, பாவனையாளர் காரியாலயம் அரசடி றோட், யாழ்ப்பாணம்
2. இலங்கை மின்சார சபை பாவனையாளர் காரியாலயம் K.K.S. வீதி, கொக்குவில்.

**விநியோக திகதி:**
17ஆம் திகதி ஏப்ரல் 2006 தொடக்கம் 30ஆம் திகதி ஏப்ரல் 2006 வரை அலுவலக நாள்களில்

**நீங்கள் செய்யவேண்டியது இது மட்டுமே....**

உங்கள் தேசிய அடையாள அட்டையையும் கடைசியாகப் பெற்ற மின்சாரப் பட்டியலையும் (Bill) எடுத்து வந்து மேற்குறிப்பிட்ட காரியாலயங்களிலிருந்து ஆகக்கூடியது 4 பல்புகளைப் பெற்றுச்செல்லுங்கள். உண்மையான CFL பல்புகளைப் பாவித்து, ஒழுங்கான முறையில் மின்சாரத்தைச் சேமியுங்கள். தரமற்ற பொருள்களைத் தவிருங்கள்.

**அனுசரணை:** PRESIDENT

(49453) (24-45-15)


## துயர் நீங்கவில்லை



அன்னை மடியில் 04 - 10 - 1937

ஆண்டவன் அடியில் 16 - 04 - 2001

**அமரர் கந்தையா பாலசுப்பிரமணியம்**

(ஸ்கூட்டர் பாலா மாஸ்ரர்)

*ஐந்து ஆண்டுகள் கழிந்ததப்பா*
*ஆறாத் துயரின்னும் நீங்கவில்லை*
*உம் பாசம் வேண்டி தினம் தவித்து*
*எம் பரம் பொருளாம் உங்கள் பாதமதை*
*உங்கள் ஆசிக்காக இறைஞ்சி நிற்கும்*

M.S.Lane
Kondavil

**மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.**

(49643)(51-

## அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும்

அமரர் தணிகாசலம் ஞானபூங்கோதை (சீனியம்மா) ஞாபகார்த்தமாக

தென்புலோலியூர் பரா.ரதீஸ் எழுதிய

"பாண்டியன் பாவை" (இலக்கிய நாடகம்) நூல்



**வெளியீட்டுவிழா**

*இடம்:*
புற்றளை மகாவித்தியாலய சீனியம்மாஅரங்கு

*காலம்:*
*23.04.2006 ஞாயிறு பி.ப. 3.மணி*

*தலைவர்:*
*வைத்திய கலாநிதி எம்.கே. முருகானந்தன்*

*பிரதம விருந்தினர்*
*திரு.க. அம்பலவாணர்*
*(கோட்டக்கல்விப் பணிப்பாளர், கரவெட்டி)*

*சிறப்பு விருந்தினர்*
*திரு.மு. அனந்தேஸ்வரன்*
*(அதிபர்,புற்றளை மகாவித்தியாலயம்)*

வெளியீட்டுரை:
*திரு.ஏ.என்.எஸ்.திருச்செல்வம்*
*(ஸ்ரீலங்கா நூலக சேவை இளைப்பாறிய உள்ளூராட்சி நூலகர்)*

*மதிப்புரை:*
*திரு.தெணியான்*
*(ஈழத்து மூத்த நாவலாசிரியர்)*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*புலோலிதெற்கு,*
*புலோலி.*

வேல் .நந்தகுமார்
செயலாளர்
**அகில இலங்கை இளங்கோ கழகம்**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்** 18.03.1934

**மறைவு** 05.05.2002

**அமரர் நாகமணி ஐயாத்துரை**

*தீராத வேதனையால் தினந்தினம் துடிக்கின்றோம்*
*மாறாத சோகத்திலே நான்காண்டுகள் கழிந்தனவே*
*வேராக நீரிருந்த எம் குடும்பம் இன்று உம்மை*
*நினைத்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்*

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவையில்

அச்சுவேலி,ஏப்.22

புத்தூர் கமநல சேவை நிலையத்தின் விவசாயப் போதனாசிரியராக எஸ்.பாலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி விவசாயப்பண்ணையில் கடமையாற்றிய இவர் தற்போது இந்த நியமனத்தைப் பெற்றுள்ளார்.

புத்தூர் பகுதி விவசாயப் போதனாசிரியராகவும் உரும்பிராய் பிரிவு பதில் போதனாசிரியராகவும் கடமையாற்றிய ம.யோகநாதன் உரும்பிராய் பிரதேசத்தின் நிரந்தர போதனாசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-11)

* * *

வலி.தென்மேற்கு,ஏப்.22

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளராகக் கடந்த 20 வருடங்களாகக் கடமையாற்றிய சு.வைரவநாதர் இம்மாதம் 11ஆம் திகதிமுதல் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

இந்தச் சங்கத்தில் பல்வேறு பதவிகளிலும் இவர் மொத்தமாக 42 வருடகாலம் பணிபுரிந்துள்ளார். (எ-135)

* * *

நல்லூர்,ஏப்.22

தலவாக்கலை புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியர்களாக 25 வருடங்களாகப் பணியாற்றிவரும் திருமதி ஆன் மேரி செல்வராணி சுபேந்திரன், திருமதி தேவமலர் ஆகிய இருவரும் தமது வெள்ளிவிழாவை அண்மையில் கொண்டாடினர்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சிபெற்ற இவ்விருவரும் 1980ஆம் ஆண்டு இக்கல்லூரியில் தமது ஆசிரியப்பணியை ஆரம்பித்தனர்.

திருமதி செல்வராணி சுபேந்திரன் கரவெட்டியையும் திருமதி தேவமலர் நல்லூரையும் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். திருமதி தேவமலர் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை ஆகியவற்றினதும் -

திருமதி செல்வராணி இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை, யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை ஆகியவற்றினதும் பழைய மாணவிகளாவர். (எ-173)

* * *

வரணி வடக்குக் கிராம அலுவலராக எஸ் இராசலிங்கம் அண்மையில் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். அதேவேளை இவர் மாசேரி கிராமத்துக்கும் பதில் கிராம அலுவலராகக் கடமைபுரிவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-122)

* * *

வேலணை பிரதேச செயலர் பிரிவிற்கான மத்தியஸ்தர் சபையின் தவிசாளராக எஸ்.கே. சண்முகலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். (எ-188-204)

* * *

கோப்பாய்,ஏப்.22

ஊரெழு கிராம அலுவலர் க.கிருஷ்ணன் கடந்த 12.03.2006 முதல் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார். தற்போது இப்பகுதிக்கான பதிற் கடமையின்பொருட்டு உரும்பிராய் வடக்குக் கிராம அலுவலர் த.தங்கராஜா நியமிக்கப்பட்டுள்ளார். (எ-72)

* * *

கோப்பாய்,ஏப்.22

கோப்பாய்க் கோட்ட அதிபர்கள் சங்க நடப்புவருட நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. தலைவராக எஸ்.மகேஸ்வரதாஸும் செயலாளராக அ.அருந்தவநேசனும் பொருளாளராக அ.அகிலதாசும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மேலும் நிர்வாக உறுப்பினர்களாக எஸ்.வேலழகன், மு.விக்னேஸ்வரன், திருமதி சாந்தி வாகீசன், எஸ்.புஸ்பராசா, வே.பாலசுப்பிரமணியம், எல்.தர்மரட்ணம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (எ-72)

* * *

தென்மராட்சி,ஏப்.22

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய ச.வீரசிங்கம் தனது சேவையிலிருந்து நேற்று இளைப்பாறியுள்ளார். (எ-117)

* * *

தென்மராட்சி கல்வி வலய அலுவலகம் மற்றும் பாடசாலைகளில் தரம் II பதவிகளைச் சேர்ந்த காவலாளிகள் மற்றும் பணியாளர்களாகக் கடமையாற்றும் 10 பேர் தரம் ஒன்றுக்குப் பதவியுயர்வு பெற்றுள்ளனர்.

பதவியுயர்வு நியமனக் கடிதங்கள் மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

க.கந்தசாமி, க.சிவத்திரை, க.கணபதிப்பிள்ளை, சி.கந்தராசா, ம.கிருஷ்ணமூர்த்தி, சி.யோகராசா, க.கனகரத்தினம், ச.கிரிதரன், இ.சிவசாமி, கு.சந்திரசேகரன் ஆகியோர் பதவியுயர்வு பெற்றவர்களாவர். (எ-117)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.22

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாவனையாளர் பாதுகாப்புச் சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் அண்மையில் இந்தச் சபையின் தெரிவுக் கூட்டம் நடைபெற்றது.

சபையின் தலைவராக வி.சிற்றம்பலமும் செயலாளராக இளைப்பாறிய ஆசிரியர் யே.பெ.அருமைநாயகமும் தெரிவுசெய்யப்பட்டனர். நிர்வாகக் குழு உறுப்பினர்களாக 9 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (எ-185)

* * *

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கத்தின் புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 19ஆம்திகதி இடம்பெற்ற கூட்டத்தில் இத்தெரிவு இடம்பெற்றது. சங்கத்தின் தலைவராக மு.தர்மகுலராசாவும் செயலாளராக சு.தனராஜும் பொருளாளராக பொ.செல்வநாயகமும் போசகராக மா.சிவசுப்பிரமணியமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (எ-202)(24-19)

# நீத்தார் நயப்புரை

## தன்னலமற்ற சேவையாற்றியவர்



தான்மட்டும் பயன் பெறும் நோக்கமின்றி தனது பகுதி மக்களின் எதிர்கால நலன்கருதி தனது இளமைக்காலத்தில் தான் பிறந்து வளர்ந்த கொக்குவில் கிழக்கு நந்தாவில் பகுதியிலும் பின்னர் புகுந்த இடமான கொக்குவில் மேற்குப் பகுதியிலும் தன்னலமற்ற சேவையாற்றி எல்லோராலும் தருமர் என அன்பாக அழைக்கப்பட்டவர்தான் அண்மையில் காலமான கந்தையா தர்மலிங்கம்.

**கு.சண்முகநாதன்**

இவர் 1925ஆம் ஆண்டு காலஞ்சென்ற கந்தையா செல்லம் ஆகியோரின் இளைய புத்திரராக கொக்குவில் நந்தாவில் பகுதியில் பிறந்து தனது கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி ஆகியவற்றில் பெற்றார். பாடசாலையில் கல்வி கற்கும் காலத்தில் சிறந்த உதைபந்தாட்ட வீரராகவும் விளங்கினார். தனது கல்வியை முடித்துக்கொண்ட பின் மருத்துவ ஆய்வுகூட உத்தியோகத்தராகத் தொழில் புரிந்த அமரர் 1952ஆம் ஆண்டு கொக்குவில் மேற்கு பிரபல வர்த்தகர் அமரர் வ.கந்தையா, சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் புத்திரி சரஸ்வதி என்பவரைத் திருமணம் புரிந்து ஒரு மகனையும் நான்கு மகள்களையும் பெற்றெடுத்து அவர்கள் மூலம் பல பேரப்பிள்ளைகளையும் கண்டார்.

அமரர் 1942ஆம் ஆண்டு தனது இளமைச் சகாக்களுடன் சேர்ந்து நந்தாவில் அம்மன் கோயிலடியில் பரந்த நோக்கத்துடன் இன்று 60 ஆண்டுகளைக் கடந்து நற்பணியாற்றிவரும் கொக்குவில் நந்தாவில் மனோன்மணி சனசமூக நிலையத்தை ஆரம்பிப்பதற்கு மூலகாரணமாக இருந்தார். இன்றுவரை இந்நிலையத்தைப் பயன்படுத்தி பயனடைந்தோர் ஏராளம். சனசமூக நிலையத்தை ஆரம்பித்தது மட்டுமன்றி அதன் செயலாளராக, தலைவராக, ஆலோசகராக பணியாற்றி தான் ஆரம்பித்துவைத்த நிலையம் சிறப்புடன் பணியாற்றுவதனைக் கண்டு பெருமைப்பட்டவராகவிருந்தார். அமரர் கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலனசபையின் செயலாளராகவும் தர்மகர்த்தாவாகவும் இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும் கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தின் உறுப்பினராகவும் பிரஜைகள் குழுத் தலைவராகவும் சேவையாற்றி பொதுமக்களின் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றவராவார்.

சிறந்த பொதுச்சேவையாளராகவும் நற்பண்புகள் நிறைந்தவராகவும் மனதில் பட்டதை ஒளிவுமறைவின்றி சொல்பவராகவும் நேர்மையாளராகவும் மனிதநேயம் மிக்கவராகவும் விளங்கிய இப்பெரியாரின் திடீர் இழப்பு குறிப்பாக கொக்குவில் பகுதி மக்களுக்குப் பேரிழப்பாகும்.

(24)

# மக்கள் முகம்



மணிங்பிளேஸ், வெள்ளவத்தை, கொழும்பு - 6 இல் வசித்துவரும் ஆறுமுகம் சின்னையா சுப்பிரமணியம் கொழும்பு மாவட்ட நீதிபதி எம். ஆர்.சி.பெர்ணாண்டோ முன்னிலையில் அண்மையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஆரம்பக் கல்வியை கைதடியிலும் உயர்கல்வியை யாழ்ப்பாணத்திலும் கற்றவர், யாழ். செயலகத்தில் ஆங்கிலத் தட்டெழுத்தாளராகக் கடமையாற்றியவர். இவர் பின் உள்ளூராட்சி எழுதுவினைஞராகவும் யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியிலும் கடமையாற்றியவர். (24)



திருவாவடுதுறை ஆதீன திருக்கைலாய பரம்பரை குருமுதல்வர் அருள்திரு. நமசிவாய மூர்த்தி சுவாமிகளின் குருபூசைப் பெருவிழாவில் அகில இலங்கை திருமுறை மன்ற தேவாரப் பாடசாலை ஆசிரியர் கலாபூஷணம் இ.திருஞானசம்பந்தனுக்கு ஆதீன 23ஆவது குருமகா சன்னிதானம் சீர்வளர் சீர்சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் 'தெய்வத் தமிழிசை செல்வர்' என்னும் விருது வழங்கிப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (எ-204) (19)

# நூல் வரிசை



நூலின் பெயர்: **நூலகப்பகுப்பாக்கம் நூலகர் கைநூல்**

நூலாசிரியர்: அருளாந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி

வெளியீடு: **நூலக விழிப்புணர்வு நிறுவகம், யாழ்ப்பாணம்.**

விரைவாக மாறிவருகின்ற நவீன உலகில் மனிதன் வெற்றிகரமாக வாழ்வதற்கு தகவல் - பகுப்பாய்வுத் திறன்கள் மிக அவசியமாக வேண்டப்படுகின்றன. இத்திறன்களை வழங்குபவை நூலகங்களாகும். மேலும் ஒரு சமுதாயத்தின் அல்லது இனத்தின் அறிவுச் செயற்பாட்டிற்கும் அடையாள இருப்பிற்கும் இன்றியமையாத பங்கினையும் நூலகங்கள் வகிக்கின்றன. இந்நூலகங்களை முறைமைப்படுத்தி வினைத்திறனாக்கி வாசகர்களின் தேவைகளை விரைவாக நிறைவேற்ற நூலகப்பகுப்பாக்கம் வழிகாட்டுகின்றது. நூலகவியலில் இதுவே முதுகெலும்பாகவுள்ளது என்ற வகையில் ''நூலகப் பகுப்பாக்கம் நூலகர் கைநூல்'' வெளிவந்திருப்பது நூலகம் சார்ந்தவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இலங்கையிலேயே முதலாவதாக இத்துறைசார்ந்த தமிழ் மொழியிலான இந்நூலை வெளியிட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசார் நூலகர் செல்வி அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி பாராட்டுக்குரியவராவர்.

இந்நூல் பொதுப் பாடசாலை நூலகங்களில் நூல்களைத் தூயி தசமப்பகுப்புத் திட்டத்தின்கீழ் ஒழுங்கமைக்க வழிகாட்டுவதுடன், நூலகப் பகுப்பாக்கத்தை ஒரு பாடமாகக் கற்கின்ற நூலகவியல் பட்டம், டிப்ளோமா, கற்பித்தலில் டிப்ளோமா மாணவர்களது தேவைகளையும் சிறப்பாக நிறைவேற்றுகின்றது.

இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இந்நூலாக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதற்பகுதியில் நூலகப் பகுப்பாக்கம் தொடர்பான அறிமுகம், அதன் அடிப்படைகள், பகுப்பாக்கத் திட்டம், புதிய மாற்றங்கள் தொடர்பான விடயங்கள் எழுதப்பட்டுள்ளன. இது கோட்பாடு சார்ந்த அறிவியல் தேவைகளை நிறைவேற்றுகின்றது. இரண்டாவது பகுதி பரந்த பகுப்புத் திட்டத்தின் அடிப்படையில் தூயி தசமப் பகுப்புத் திட்டத்தின் பொருட் துறைகளையும் அவற்றிற்குரிய வகுப்பெண்களையும் அட்டவணைப்படுத்துகின்றது.

இந்நூலின் அடுத்த சிறப்பு எமது பிரதேச தமிழ் மொழி பொருட்துறைகள் என்பவற்றிற்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் தூய தசம பகுப்புத் திட்டத்தினூடாக வழிகாட்டல்கள் இயம்பப்பட்டுள்ளமையாகும். நூலாசிரியரின் இம்முயற்சி அவரது தாய்மொழிப்பற்றை இயம்பி நிற்கின்றது. இவ்வகையில் ''நூலகப் பகுப்பாக்கம் நூலகக் கைநூலை'' வாசகர்களும் நூலகக் கற்கை மாணவர்களும் நூலகர்களும் வாங்கி - வாசித்து முழுமையாகப் பயன்படுத்துதல் இன்று காலத்தின் தேவையாகவுள்ளது.

(24) - **பா.தனபாலன்.**



நூலின் பெயர்: **பகிர்வு**

நூலாசிரியர்: ஜெ.சுபாஷினி

செல்வி சுபாஷினி ஜெகநாதன் அவர்களுடைய கன்னிப் படைப்பாகப் ''பகிர்வு'' என்னும் இக்கவிதைத் தொகுதி நூலினை பத்தோடு பதினொன்று என்றில்லாமல் சிறந்த தமிழிலக்கியங்களின் வரிசையில் ஒன்றாக இதை வைக்கின்றேன்.

சுபாஷினியின் நெஞ்சத் தூய்மை - தாய் மண் பற்று - சிந்தனை ஆற்றல் - மொழி ஆளுமை - இலக்கிய வளம், கொள்கைப் பிடிப்பு, மானிட நேயம் அனைத்தையும் இந்நூல் காட்டும் சுவை அல்ல. சூடு பெற உதவுவன.

தமிழர் வாழ்வினைச் சூழ்ந்த கொடுமைகளின் வேரில் கோடரியாய் அவர் தமிழ் சிலிர்த்து நிற்கின்றது. அதில் 'அழகு தேடவில்லை. கூர்மையைப் பார்க்கின்றேன்.

தன்னுடைய வாழ்வில் சந்திக்க நேர்ந்த அனுபவங்களை ''தன் நெஞ்சை நெகிழ்த்தும் மொழியில்'' பதிவாக்கி இருக்கின்றார். பெரும்பாலும் அகநிலை வயப்பட்ட இந்த அனுபவங்களின் கால நீட்சி குறித்த காலத்தின் விமர்சனத்தையே பெரிதும் காட்டுகின்றன.

பெண் இலக்கிய கர்த்தாக்கள் குறிப்பிட்ட சில காலத்தினுள் நூல்களை வெளிக்கொணர்வது என்பது இன்றைய எமது ஈழத்து தமிழ் கவிதை உலகில் பெரும் போராட்டம்தான். இருந்தும் அனைத்தையும் எதிர்கொள்வதற்கான திடசங்கற்பத்துடனும் எதிரே விரிந்து நிற்கும் சவால்கள் நிறைந்த காலத்தை சந்திப்பதற்கான துணிவுடனும் புறப்பட்ட சுபாஷினியின் உழைப்பிற்கும் முயற்சிக்குமிடையே இது தொடர்புள்ளிதான்.

தன்னார்வம் கொண்டு தனது ஆத்மாவுடன் பேசிக்கொள்ளும் இவரது அனேக கவிதைகள் இவருடனேயே சமாதி கொண்டுவிட்டிருக்கின்றன. சூரியனைக் கைகளினால் மறைத்துவிடமுடியாது. இன்று சுபாஷினியின் கவிதைத் தொகுதி வெளிவருகின்றது. இவரைத் [illegible] கவிஞர் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதையே இத்தொகுதி வலியுறுத்துகின்றது.

(24) **நயினை. கி.கிருபானந்தா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சினால் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசி வழங்கலுக்கான கேள்வி கோரல்

01. யாழ்ப்பாண மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2006 ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவுசெய்யப்பட்ட ப.நோ.கூ சங்கங்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ சங்கங்களுக்கென எதிராக குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ சங்கத்திற்கும் வழங்கப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை அவ்வவ்போது அறிவிக்கப்படும்.

| இல. | ப.நோ.கூ. சங்கம் | அரிசியின் அளவு 2006 ஜூலை (MT) | 2006 ஓகஸ்ட் (MT) | 2006 செப்ரெம்பர் (MT) |
|---|---|---|---|---|
| 1 | சாவகச்சேரி | 70 | 70 | 70 |
| 2 | கைதடி | 30 | 30 | 30 |
| 3 | கொடிகாமம் | 80 | 80 | 80 |
| 4 | உடுப்பிட்டி | 15 | 15 | 15 |
| 5 | கட்டைவேலி - நெல்லியடி | 15 | 15 | 15 |
| 6 | பருத்தித்துறை | 40 | 40 | 40 |
| 7 | புலோலி | 15 | 15 | 15 |
| 8 | மருதங்கேணி | 20 | 20 | 20 |
| 9 | யாழ்ப்பாணம் | 75 | 75 | 75 |
| 10 | நல்லூர் | 30 | 30 | 30 |
| 11 | அச்சுவேலி | 35 | 35 | 35 |
| 12 | நீர்வேலி | 30 | 30 | 30 |
| 13 | மானிப்பாய் | 25 | 25 | 25 |
| 14 | பண்டத்தரிப்பு | 25 | 25 | 25 |
| 15 | அளவெட்டி - மல்லாகம் | 15 | 15 | 15 |
| 16 | தெல்லிப்பழை | 60 | 60 | 60 |
| 17 | சங்கானை | 50 | 50 | 50 |
| 18 | சுன்னாகம் | 50 | 50 | 50 |
| 19 | புங்குடுதீவு - நயினாதீவு | 25 | 25 | 25 |
| 20 | வேலணை | 20 | 20 | 20 |
| 21 | ஊர்காவற்றுறை | 20 | 20 | 20 |
| 22 | காரைநகர் | 25 | 25 | 25 |
| 23 | தீவகம் | 15 | 15 | 15 |
| 24 | நெடுந்தீவு | 15 | 15 | 15 |
| | மொத்தம் | 800 | 800 | 800 |

02. கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத்தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வது என்பது தேவைக்கு ஏற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.

03. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்விவைப்பாக ரூபா 500/=ஐ யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2006.04.24ஆம் திகதி தொடக்கம் 2006.05.09ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களை பொறுத்த வரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

04. மீளளிக்கமுடியாத கேள்விவைப்புகளாக ரூபா 500/= ஐ அந்தந்த மாவட்டச் செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

05. கேள்வி கோரப்படவுள்ள அரிசி சிவப்பு நாட்டரிசியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

06. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை **தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)** என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புநல்லிணக்கச் செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2006.05.10 பி.ப. 2 மணிக்கு முன்பாக சேர்த்தல்வேண்டும். அன்றைய தினம் பி.ப. 3 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

07. கேள்வி பத்திரத்தின் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சிவப்பு நாட்டரிசி வழங்குவதற்கான கேள்வி'' என எழுதப்படல்வேண்டும்.

08. கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாக் கருதப்படும்.

09. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யுப்படும்பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணங்கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

11. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாள்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

*க.கணேஷ்,*
*தலைவர்/ அரச அதிபர்,*
*மாவட்ட கேள்விச் சபை/ மாவட்டச் செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*

2006.04.20.

(சி/49034)(32-15-45)

## வடக்கு - கிழக்குக்கு செல்லவேண்டாம் அமெரிக்க பிரஜைகளுக்கு வலியுறுத்து

இலங்கையில் தமிழர் தாயகப் பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்ள வேண்டாமென்று அமெரிக்கா இலங்கையிலுள்ள தனது குடிமக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை அரச படைகள் மீதான கிளைமோர் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இந்தத் தாக்குலில் பொதுமக்களின் வாகனங்களும் சேதமடைந்துள்ளன. திருகோணமலை சந்தைப் பகுதியில் குண்டுவெடித்ததையடுத்து இனமோதல் உருவாகி இழப்புகளும் படுகாயங்களும் ஏற்பட்டுள்ளன. ஆகையால் இலங்கையிலுள்ள அமெரிக்க நாட்டவர் புத்தளம் மற்றும் அனுரதாதபுரம் ஊடாக திருகோணமலைக்குச் செல்வதை தவிர்க்க வேண்டுகிறோம்.

இலங்கையின் கிழக்குப் பகுதியில் குறிப்பாக மட்டக்களப்பில் பல குழுக்கள் மற்றும் இலங்கை அரசபடைகள் தொடர்பில் நிலைமை மோசமடைந்து வருகின்றன. மட்டக்களப்பில் கிளைமோர் தாக்குதலும் நடந்துள்ளது. ஆகையால் அமெரிக்க நாட்டவர் இப்பிரதேசங்களுக்குச் செல்லுமுன்பு அலலது இப்பிரதேசங்களில் பணியாற்றும் முன்பு தங்களது தனிப்பட்ட பாதுகாப்பைப் பரிசீலனை செய்துகொள்ளுமாறு கடுமையாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

இலங்கை பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக அமெரிக்க நாட்டவர் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம் - என்று அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கப்பம் பெற முயன்ற பொலீஸ் அதிகாரி கைது

கொழும்பு, ஏப். 22

விபத்துச் சம்பவமொன்றின் விசாரணைகளைத் தளர்த்துவதற்காக 8,000 ரூபா லஞ்சம் பெற முயன்ற முந்தல் போக்குவரத்துப் பொலீஸ் அதிகாரி ஒருவர் நேற்றுமுன்தினம் முந்தல் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாயன்று முந்தல், மந்துரெலிய பகுதியில் மோட்டார் சைக்கிளொன்றும், ஓட்டோவொன்றும் விபத்துக்குள்ளாகியது. குறித்த ஓட்டோச் சாரதியிடம் இந்த விபத்து விசாரணையைத் தளர்த்துவதற்காக இவர் கப்பமாக 8 ஆயிரம் ரூபா வழங்குமாறு கோரியிருந்தார். அதனைப்பெற முயன்ற போதே பொலீஸார், போக்குவரத்துப் பொலீஸ் அதிகாரியைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பொறுப்பதிகாரி நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். (க - 3)

## சத்தியதர்மசாலை ஓகஸ்டில் திறப்பு

தென்மராட்சி, ஏப். 22

அருட்பிரகாச வள்ளலார் நெறிப்படி மீசாலை, வேம்பிராயில் அமைக்கப்பட்ட சத்திய தர்மசாலை, சத்தியஞானக் கோட்டம், நூலகம் ஆகிய கட்டடங்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் திறக்கப்படவுள்ளன.

ஓகஸ்ட் 18ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை கட்டடத் திறப்பு விழாவும் கண்காட்சிகளும் அகில உலக சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்க மாநாடும் இடம் பெறவுள்ளன.

சத்தியஞானக் கோட்டத்தில் அருட்பெரும் ஜோதி தரிசனத்திற்குரிய திருநிலைக் கண்ணாடி தமிழ்நாடு வடலூரிலிருந்து அருட்பிரகாசம் வள்ளலார் சத்தியஞான சபையினரால் கொண்டுவரப்படவுள்ளதாக தெரிவிக்கபட்டது. (3-117)

## பாராட்டு விழா

நவாலி,ஏப்.22

ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளராக கடந்த 26 வருடங்கள் தொடர்ச்சியாக பணியாற்றிவரும் ச.சந்திரர்ாசாவைப் பாராட்டிக் கௌரவித்த நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

நிலையத் தலைவர் க.தங்கவேலாயுதம் தலைமையில் நிலைய முன்றிலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக க.இராஜேந்திரமும் சிறப்பு விருந் தினர்களாக மகாஜன சனசமூக நிலையத் தலைவர் சி.அம்பிகைபாலன், முன்னைநாள் உப அதிபர் கதிரேசு, க.பாலசுந்திரம் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். (3-100)

இதோ அறிமுகப்படுத்துகின்றோம்
**சிதார வர்ம தைலம்**
உடைவு, முறிவு, வீக்கம், சுளுக்கு,
இரத்தக்கட்டு, முழங்கால் மூட்டுவலி,
குதிக்கால் வலி ஆகியவைகளுக்கு
காலை, மாலை பூசி வரவும்.
Reg.Number 10171 ARPR No.228
(வெளிப்பிரயோகத்திற்கு மட்டும்)
சந்தைப்படுத்துவோர்:
**சிவா நறுமணப்பூங்கா,**
*288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
T.Phone: 222 2567
(சி/38632)(32-15-11)

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம், மானிப்பாயில் இயங்கும் ''ஏலிம்'' சிறுவர் இல்லத்திற்கு கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. தகுதியுடையவர்கள் தெளிவான விலாசம், தொலைபேசி இலக்கத்துடன் கூடிய சுயவிவரக் கோவையைக் கீழ்க்காணும் விலாசத்திற்கு எதிர்வரும் 24.04.2006இற்கு முன் அனுப்பிவைக்கவும்.

**The Administrater,**
**No.19/1, Beach Road,**
**Mount Lavinia.**

**The Administrater,**
**'Elim' Children's & Voluntary Home**
**Memorial School lane, Manipay.**

**பதவி வெற்றிடங்கள்:**
1. ஆண் பராமரிப்பாளர் (வயது 40 இற்கு மேல்)
2. சமையற்காரர் (வயது 40 இற்கு மேல்)
3. பூந்தோட்ட பராமரிப்பாளர் (வயது 35 இற்கு மேல்)
4. கணக்காளர் (வயது 45-55இற்கு இடையில்)
5. களஞ்சியக் காப்பாளர் (30-45இற்கு இடையில்)

தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:
**0777681144, 0115524388, 0777913873**
**FAX: 0115524386**

(49650) (24.15.11.32)

## பதவி வெற்றிடம்

கிளிநொச்சி சேவாலங்கா நிறுவனத்தின் சுனாமி அலுவலகத்தில் சமூக உளநல வெளிக்கள அலுவலர் பதவிக்கு உடனடியாக நியமனம் செய்வதற்காக பின்வரும் தகைமைகளை கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**தகைமைகள்:**

1. க.பொ.த (உயர்தரம்) அல்லது க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ் உட்பட குறைந்தது 3 திறமைச் சித்தி
2. சமூக உளநலத் துறையில் அனுபவம், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் தராதரப்பத்திரங்கள் (குறைந்தது 6 மாத அனுபவம்). அறிக்கை தயாரிக்கும் திறமை முக்கியமாகக் கருத்தில்கொள்ளப்படும்.

**வெற்றிடங்கள் உள்ள இடங்கள்:**

முல்லைத்தீவு
கல்லாறு
மருதங்கேணி
பருத்தித்துறை

விண்ணப்பங்கள் நேரடியாகவோ அல்லது பக்ஸ் மூலமாகவோ, கடித மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி:

**திட்டப்பணிப்பாளர்,**
**சேவாலங்கா மன்றம்,**
**சுனாமி காரியாலயம்,**
**இல.72, திருநகர் வீதி,**
**கிளிநொச்சி.**

Fax No: 021 2283957

விண்ணப்பங்கள் சேரவேண்டிய இறுதி திகதி 02.05.2006

*குறிப்பு:* அந்தந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(சி-49036)(21.32.15.45)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

*அன்னை மடியில்*
*20 - 06 - 1933*



*ஆண்டவன் அடியில்*
*24 - 03 - 2006*

திருமதி

**அபிராமிப்பிள்ளை அருளானந்தம்**

*வையத்துள் வாழ்வாங்கு சிறப்புற வாழ்ந்து எம்மை வழி நடத்தி 24.03.2006 ஆம் நாளன்று அமரத்துவம் எய்திய எங்கள் குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் பல்வேறு வழிகளில் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் உதவிகள் புரிந்தோருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

*அன்னாரின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் சித்திரை மாதம் 10ஆம் நாள் (23.04.2006) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.*

**- குடும்பத்தினர்.**

விநாயமுதலியார் வீதி,
பருத்தித்துறை.

(சி/49020) (24.21.14.19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய உறவுகள் புத்துயிர்பெற அராலிப்பாலம் பெரிதும் உதவும்

*'தீவுப் பகுதி போக்குவரத்தில் அராலி - வேலணைப் பாலம்' என்ற தலைப்பில் கடந்த 16 ஆம் திகதிய உதயனில் வெளியான கட்டுரையின் இரண்டாவது பகுதி இன்று பிரசுரமாகிறது.*

**வரலாற்று நோக்கில் ஒரு பார்வை.....2**

நயினாதீவு மக்கள் 1950 களுக்கு முற்பட்ட காலங்களில் ஊர்காவற்றுறையூடாகவே குடாநாட்டைச் சென்றடைந்தனர். 1950களின் பின்னர் 1967ஆம் ஆண்டு வரையும் புங்குடுதீவு கழுதைப்பிட்டி துறைமுகத்தையே பயன்படுத்தி நீண்ட கடற்பயணத்தைத் தவிர்த்துக்கொண்டனர்.

1890ஆம் ஆண்டு பிறந்த க.அம்பலவாணர் (பெரியவாணர்) 1893ஆம் ஆண்டு பிறந்த ச.அம்பலவாணர் (சின்ன வாணர்) ஆகியோரின் பொதுநல முயற்சியின் விளைவாகவே புங்குடுதீவு – வேலணைப் பாலம் (கற்பாதை) உருவானது என்றால் மிகையாகாது. இவர்களது ஆங்கிலக் கல்வி அறிவு, சமூக முன்னேற்ற மனப்பாங்கு, மலாயாவுடன் கொண்டிருந்த தொடர்பு, மலாயா - புங்குடுதீவு ஐக்கிய சங்கம் உருவாக்கம், 1920-1935ஆம் ஆண்டுகளிடையில் பாலமமைப்பதன் அவசியத்தை அரசுக்கு தொடர்ச்சியாக எடுத்துரைத்தமை, அரசுப் பிரதிநிதிகளுடன் கொண்டிருந்த தொடர்ச்சியான சந்திப்புக்கள், சட்ட நிரூபண சபையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவினையும் பெற்றுக்கொண்டமை, அப்போதைய தேசாதிபதியை இணங்க வைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அணுகு முறைகளுடன் இருவரும் பொதுமக்களோடு இணைந்து செயற்பட்டதன் விளைவாக 1935ஆம் ஆண்டு இப்பால வேலை ஆரம்பிக்கப்பட்டது.

1953ஆம் ஆண்டு அப்போதைய தீவுப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினரான அல்பிரட் தம்பிஐயாவின் முயற்சியும் இணைநது இப்பால வேலை பூர்த்திசெய்யப்பட்டு மக்கள் பாவனைக்காகத் திறந்துவிடப்பட்டது.

அன்றைய நிலையில் புங்குடுதீவு மக்களை மையமாகக்கொண்டே இப்பாலம் அமைக்கப்பட்ட போதிலும் காலப்போக்கில் நயினாதீவு, நெடுந்தீவு மக்களின் போக்குவரத்தில் இப்பாலம் முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டது எனலாம். குறிப்பாக நயினாதீவு மக்கள் ஏறத்தாழ 8.0 சதுர கிலோமீற்றர் கடற்பயணம் செய்து குடாநாட்டுக்குச் சென்றநிலை மாறி ஏறத்தாழ 3.5 கிலோமீற்றர் தூரத்தைக் கடந்து கழுதைப்பிட்டி துறைமுகத்தினூடாகப் புங்குடுதீவு வந்து குடாநாட்டுக்குச் செல்லும் வாய்ப்புக்கிட்டியது. நயினாதீவில் அமைந்துள்ள பிரசித்திபெற்ற இந்து, பௌத்த ஆலயங்களைத் தரிசிப்பதற்குப் பெருந்திரளான மக்கள் கழுதைப்பிட்டிப் பாலத்தைப் பயன்படுத்தி வந்தனர். எனினும், புங்குடுதீவு மக்கள் இப்பாலம் அமைககப்படுவதற்கு முன்னர் புளியடித் துறையினூடாகவே பல கிலோமீற்றர் தூரம் கடற்பயணம் செய்து யாழ்ப்பாணத்தை அடைந்தனர் என்பதும் உண்மை நிலையாகும்.

1967ஆம் ஆண்டு புங்குடுதீவு குறிகாட்டுவான் பாலவேலை பூர்த்தியடையவே நெடுந்தீவு மக்கள் 20 கிலோமீற்றர் தூரம் பயணஞ்செய்து நகரையடைந்த நிலைமாறி 11 கிலோமீற்றர் தூரம் கடற்பயணம் செய்து குறிகாட்டுவானூடாக தரைப்பாதை வழியாக சென்றடையும் வாய்ப்பு ஏற்பட்டமைக்கு புங்குடுதீவு – வேலணைப் பாலத்தின உருவாக்கமே காரணம் எனலாம் அதே போல நயினாதீவுக்கான பயணிகளும் கழுதைப்பிட்டியூடாக 5 கிலோமீற்றர் கடற்பயணத்தினை குறிகாட்டுவான் கற்பாதை அமைக்கப்பட்ட பின்னர் 2.5 கிலோமீற்றராக குறைக்கப்பட்டதால் பயமற்றதும் விரைவானதுமான போக்குவரத்து முறைமை ஏற்பட வழிவகுத்தது எனலாம். இதனால் பாதிப்படைந்தது புங்குடுதீவு கழுதைப் பிட்டியூடான போக்குவரத்தேயாகும் இதனால் பலர பொருளாதார முயற்சியினை இழக்க வேண்டியேற்பட்டது. இது தவிர்க்கமுடியாதது. இத்துறைமுகத்தை அழியவிடாது மீன்பிடித்துறைமுகமாக மாற்றி அமைக்க அரசும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரச அதிகாரிகளும் முன்வரல் வேண்டும்.

## காலத்தின் தேவையான பெரும்பணியை நிறைவேற்றித் தரப்போவது யார்?

### ஊர்காவற்றுறையூடான போக்குவரத்து

வரலாற்றுக்காலங்களிலிருந்து தீவகம் உட்பட யாழ்ப்பாணப் பிரதேசங்களை ஆட்சி செய்த மன்னர்கள் அதன் பின்னர் ஐரோப்பியர் ஆட்சிக்காலங்களில் ஊர்காவற்றுறைத் துறைமுகமானது யாழ்ப்பாணப் பிரதேசத்துடனான போக்குவரத்தில் பெரும்பங்கினை ஆற்றியுள்ளதை வரலாறு கூறுகின்றது. கப்பல் கட்டும் தொழில்விருத்தி பெற்றிருந்ததுடன் யானை மற்றும் கரல்நடைகளைச் சந்தைப்படுத்தும் மையமாகவும் இருந்துள்ளது. அத்துடன் காரைநகர் - ஊர்காவற்றுறை இடைபட்ட ஆழமான கடற்பரப்பினூடாக யாழ்ப்பாணம் அலுப்பாந்தி மற்றும் கோட்டைப் பிரதேசத்திற்கும் வெளியிடங்களுக்குமான போக்குவரத்தின் வழியாகவும் காணப்பட்டிருந்ததுடன் யாழ்ப்பாணப் பிரதேசத்தை குறிப்பாக யாழ்ப்பாணக் கோட்டையின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு ஹமன்ஹுல் கோட்டை அமைத்து அதிலிருந்து காவல் புரிந்துள்ளனர்.

இத்தகைய பல்வகைப்பட்ட சிறப்புக்களை ஒருங்கே பெற்ற ஊர்காவற்றுறை துறைமுகத்தினூடாக புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளிலிருந்து மக்கள் கடந்தும், துறைமுகத்தினூடாகவும் யாழ்ப்பாண நகருக்கான போக்குவரவு 1940களின் இறுதிக் காலம்வரை நிகழ்ந்ததாக பல்வகைப்பட்ட சான்றுகள் மூலம் அறியமுடிகின்றது.

ஏற்கனவே கூறியது போல அந்நியர் ஆட்சிக்காலத்தில் சிறப்புற்றிருந்த Kayts என்று அழைக்கப்பட்ட ஊர்காவற்றுறை துறைமுகப் பட்டினம் தீவுப்பகுதி மக்களின் வர்த்தக மையமாகவும் அரச நிர்வாக அலுவலகங்களைக் கொண்ட பிரதேசமாகவும் திகழ்ந்துள்ளது. 1967ஆம் ஆண்டு புங்குடுதீவு குறிகாட்டுவான் துறைமுகம் சேவைக்குத் திறந்து விடப்பட்டவுடன் ஊர்காவற்றுறை துறைமுகத்தின் சிறப்பும் படிப்படியாகக் குறைவடையலாயிற்று.

ஊர்காவற்றுறை துறைமுகம் எல்லா வகையிலும் பயன்களைச் செய்யமுடியாத நிலைகாணப்பட்டதால் இத்துறைமுகத்திலிருந்து ஏறத்தாழ 2 கிலோமீற்றர் தெற்கேயமைந்துள்ள கண்ணகி அம்மன் கோவிலடியில் மக்களின் போக்குவரத்துக் கருதி குறுகிய தூரத்திற்கு கற்பாதை ஊடாக நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய தீவுகளிலிருந்து வரும் மக்களின் இறங்கு/ஏறுதுறையாக அன்றும் இன்றும் காணப்படுகின்றது. ஊர்காவற்றுறை துறைமுகம் இலங்கைக் கடற்படையின் கண்காணிப்பில் இருப்பதனால் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரவே நிகழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஊர்காவற்றுறை துறைமுகத்திற்கும் காரைநகருக்குமிடையிலான தூரம் ஏறத்தாழ 750 மீற்றராகும். இவ்விரு தீவு களுக்குமிடையில் கற்பாதை/பாலம் அமைக்கப்படின் காரைநகருடாக வலிகாமப் பிரதேசங்களுடனும், பெரிய யாழ்ப்பாணத்துடனும் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு உண்டு. ஆனால், இதற்கான மக்களின் அபிலாசைகள் அண்மைக்காலம்வரை வெளிக்கொணரப்படவில்லை. இதற்குப்பல காரணிகள் இருக்கக்கூடும். இருப்பினும் நவீன தொழிநுட்ப வளர்ச்சியானது இவ்விரு பிதேசங்களுக்குமிடையிலான போக்குவரத்துக்கு பாலம் அமைப்பதென்பது பெரிய விடயமாக இருக்காது.

### தீவுப் பகுதிக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குமான போக்குவரத்துக்கு கற்பாதை அமைப்பதற்கான வரலாறு


தீவுப்பகுதிக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குமிடையிலான போக்குவரத்தில் கடலில் கற்பாதை அமைத்து போக்குவரத்தினை இலகுவாக்கப்படல் வேண்டுமெனீ கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளாக பல்வேறு வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதைக் காணமுடிகின்றது. ஆனால் ஆழ்கடல்களால் சூழப்பட்ட தவுகளுடனான பாலம்/கற்பாதை அமைப்பதென்பது அன்றும்சரி இன்றும்சரி அதனை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசினால் முடியாத காரியமாகவே இருந்துவருகின்றது. இன்றைய நிலையில் ஏற்கனவே உள்ள வீதிகளைத் திருத்துவதற்கே அரசு திண்டாடி வருகின்றதை உணரமுடிகின்றது. எனினும் குறைந்தபட்சம் பெருமளவிற்கு பரவைக்கடல்களால் சூழப்பட்டிருக்கும் தீவுகளுடன் யாழ்ப்பாணக் குடாநாட்டை இணைப்பதென்பது சாத்தியப்படக்கூடிய விடயமாகவே உள்ளது. இது விடயத்தில் 19ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியிலிருந்து அரசியல்வாதிகள், சமூகசேவகர்கள் இதன் முக்கியத்துவம் பற்றி அரசுக்கும் அரச பிரதிநிதிகளுக்கும் அடிக்கடி தெரிவிக்கத் தவறவில்லை. இந்நிலையில் 1878ஆம் ஆண்டு காரைநகர் - பொன்னாலை கற்பாதை அமைக்கப்பட்டதனால் அத்தீவில் வாழ்ந்து வந்த மக்கள் குடாநாட்டுடன் இலகுவாகத் தொடர்பு கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் ஏனைய தீவுகள் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் அண்மையிலுள்ள வேலணைத்தீவு, மண்டைதீவுக்குமிடையில் வீதிப் போக்குவரத்து ஏற்படுத்தித்தரல் வேண்டும் என அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கினர். ஆனால் அப்பிரதேசங்களை இணைப்பதனால் நன்மையுண்டு என்பது தொடர்பாக தீவகமக்களிடையே வாதப் பிரதிவாதங்கள் தலைதூக்கியிருந்தன. மகஜர்கள், பெட்டிசங்கள், நேர்காணல்கள், தந்தியடித்தல், சட்டநிரூபண சபை அங்கத்தவர்களைச் சந்தித்தல் போன்ற பல செயற்பாடுகள் கற்பாதை அமைப்பதற்கு செயற்படுத்தப்பட்டன. இந்நிலையில் மண்டைதீவு – அலுப்பாந்திக்கு இடையிலான கற்பாதை அமைத்தல் வேலணை வடக்குத்துறை – அராலிக்குமிடையில் கற்பாதை அமைத்தல் என்ற இரு கோஷங்களால் தீவகமக்களிடையே ஒற்றுமை நிலவவில்லை. அதற்கான வாதப்பிரதிவாதங்கள் தலைதூக்கியிருந்தன எனலாம். இவ்விருபிரிவினரும் தத்தமக்குச் சார்பாக வாதங்களை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையிருக்க, மேலைத்தேசத்தவரின் வருகை குறிப்பாக போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்களில் யாழ்ப்பாண நகரத்தில் கட்டப்பட்டிருந்த கோட்டையுடனும் யாழ்ப்பாண நகரத்துடனும் தூர இடங்களுக்கான கடல்வழிப் போக்குவரத்தினை மேற்கொள்ளும் பொருட்டு யாழ் கடனீரேரிப்பகுதியில் அவர்களது படகுகள் பெருங்கடலுக்குச் சென்று வருவதற்கு செயற்கையாக வெட்டுவாய்க்கால் அமைத்திருந்தனர். குறிப்பாக கோட்டையை மையமாகக்கொண்டு கிழக்கேயும் மேற்கேயும் இவ்வெட்டுவாய்க்கால்கள் வெட்டப்பட்டிருந்தன. யாழ்ப்பாணக் கடனீரேரியின் ஏனைய பகுதிகள் சார்புரீதியாக ஆழங்குறைந்த பரவைக்கடலாக இருந்தமையால் மக்கள் சிறுவள்ளங்கள் மூலமாகவும் அவசியமேற்படின் நடந்தே கடலைத் தாண்டியும் யாழ்ப்பாணக்குடா நாட்டுக்கான போக்குவரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

(வளரும்)

பேராசிரியர் கா.குகபாலன்
தலைவர், புவியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

1967 காலப்பகுதிக்குப் பின்னர் யாழ். குடாநாட்டுத் தீவுகளுக்கிடையிலான படகுப் பயணப்பாதைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Organ/violin Notes**

200 சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புகள், Keyboard exercise, Theory கேள்வி ஞானம் ஆகியன விற்பனையாகின்றன.

**Karaweena Isai Manram,**
131, Temple Rd., Nallur.
T.P.: 071 3055991, 0777 031293
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500m தெற்கே)

(49012)(21-15-14)

# சிறைக்குள் சலுகைகள்: ஆராயக் குழு

கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையிலும் ஏனைய சிறைச்சாலைகளிலும் ஒருசில குற்றவாளிகளுக்கும் சந்தேகநபர்களுக்கும் வழங்கப்படும் சலுகைகள், சொகுசு ஏற்பாடுகள் குறித்து அறிவதற்கு விசேட விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது - என நீதி மறுசீரமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நீதிமறுசீரமைப்பு அமைச்சர் அமரசிறி தொடங்கொடவுக்கு இட்டுள்ள பணிப்புரைக்கமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

# முன்பள்ளிகளின் கண்காட்சி

வடமராட்சி,ஏப்.22

வல்வெட்டித்துறை கொத்தணி முன்பள்ளிகளின் கண்காட்சி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் வல்வெட் டித்துறை சிதம்பராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. வல்லை கொத்தணி முன்பள்ளிகளின் தலைவர் மு.இரவீந்திரன் தலைமையில் இக்கண்காட்சி நடைபெறும். இந்தக் கண்காட்சி நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (எ-173)

# ஜயோதர

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7505992 முதல் 7514500 வரை. சீட்டிழுப்பு இல. 229 திகதி 20-04-2006

### வெற்றி எண்கள்

1 5 5 2 6 3 — சுப்பர் எண் 01

ஜக்பொட் பரிசு ரூ. **12,375,200/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 12,375,200/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 08 | 50,000/= | 400,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 76 | 5,000/= | 380,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 743 | 500/= | 371,500/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 7467 | 50/= | 373,350/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 73969 | 10/= | 739,690/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 05 | 5,000/= | 25,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 74 | 1,000/= | 74,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 750 | 100/= | 75,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 7390 | 20/= | 147,800/= |
| | | மொத்தம் ரூ. | 3,586,340/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **4,188,940/-**

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| புத்தளம் | 7508307-6-73 |
| கொழும்பு | 7506120-7-80 |
| நுவரேலியா | 7511042-0-91 |
| மாத்தறை | 7512469-6-73 |
| கேகாலை | 7511654-1-13 |
| காலி | 7508907-1-09 |
| இரத்தினபுரி | 7506699-1-08 |
| பதுளை | 7507480-6-80 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. **12,582,750/-**

தொடர் இல. 6603275 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 ஏப்ரல் 24 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

# அணி நிரல் தெரிவு

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் வருடா வருடம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் அணி நிரல் தெரிவு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கோண்டாவில் ஸ்ரீ நாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. (3)

உ
சிவமயம்

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு

தோற்றம் 10 - 01 - 1970



மறைவு 14 - 04 - 2006

நிகழும் மங்களகரமான விய வருஷம் சித்திரை மாதம் முதலாம் நாள் (14.04.2006) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**சிவஸ்ரீ திருமலைசாமிசர்மா (கணேசையா) இரகுநாதக்குருக்கள்**

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

தசாகம் - விய வருஷம் சித்திரை மாதம் 10ஆம் நாள் (23.04.2006) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு.

ஏகோதிஷ்டம் மாசியம் - சித்திரை 11ஆம் நாள் (24.04.2006) திங்கட்கிழமை

சபிண்டீகரணம் - சித்திரை 12ஆம் நாள் (25.04.2006) செவ்வாய்

கிருஹயக்ஞம்(மதியபோசனம்)- சித்திரை 13ஆம் நாள் (26.04.2006) புதன்கிழமை

மேற்படி ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*பருத்தித்துறை வீதி,*
*கோப்பாய் வடக்கு, கோப்பாய்.* (49666) (32.21.14.45)

**குடும்பத்தினர்.**

# பொருள்கள் வழங்குநர்களைத் தெரிவுசெய்வதற்கான கூறுவிலை கோரல்

GTZ வடபுனரமைப்புத் திட்டம் கோப்பாய், தென்மராட்சி ஆகிய பிரதேசங்களில் தலா 60 வீடுகள் கட்டிக்கொடுக்க இருப்பதனால் தகுந்த வழங்குநர்களிடம் இருந்து கீழ்க்குறிப்பிடப்படும் பொருள்களுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றது.

**60 வீட்டிற்கான கணியம்**

1 கண்ட கல் : 234 கீப்
2. கிறேசர் சல்லி ¾" : 219 கீப்
3. கிறேசர் சல்லி ½" : 83கீப்
4. மணல் : 458 கீப் (வகையையும் தரத்தையும் குறிப்பிடவும்)

கோப்பாய் பிரதேச செயலகம்
1. நீர்வேலி வடக்கு J/269
2. உரும்பிராய் கிழக்கு J/266
3. உரும்பிராய் வடக்கு J/264
4. அச்சுவேலி மேற்கு J/286
5. பத்தைமேனி J/281
6. புத்தூர் வடக்கு J/274

தென்மராட்சிப் பிரதேச செயலகம்
1. கோவில்குடியிருப்பு J/301
2. கல்வயல் J/305
3. சரசாலை மேற்கு J/316
4. எழுதுமட்டுவாள் வடக்கு J/334

வழங்குநர்கள், அளவு, தரம், கால எல்லை என்பவற்றை குறிப்பிட்டு தங்கள் முழுமையான விவரங்களை 28.04.2006 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் குறிப்பிடப்பட்ட பிரதேச செயலகங்களில் ஒப்படைத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். கேள்விகள் 3ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

பிரதேச செயலர்,
கோப்பாய்.

(சி/49058)(32.21.14.45)

பிரதேச செயலர்,
தென்மராட்சி.

உங்களின் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்ளுங்கள்!
நாம் நினைத்ததைச் சாதிப்பத
உடல் நலமும் வேண்டும் உளநலமும் வேண்டும்
அப்படியாயின் இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!!!



இலகுவான முறையில் ஆரோக்கியத்தைப் பெறுவது எப்படி என்பதை அறிந்து கொள்வதற்கு ஆயுள்வேத வைத்தியர்களுடன் இணைந்து மாபெரும் கருத்தரங்கு நடைபெறவுள்ளது

ஆரோக்கியத்தில் அக்கறை உள்ள அனைவரும் எம்முடன் இணைந்து கொள்ளலாம்

காலம்: நாளை (23.04.2006) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 10 மணி
இடம்: நாவலர் கலாசார மண்டபம் யாழ்ப்பாணம்



அனுமதி இலவசம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

நல்லாரோக்கிய வாழ்வை நோக்கி அனைவரையும் அழைக்கின்றோம்

**நீங்கள் இலகுவாக சம்பாதிக்கலாம்! எப்படி?**

பொழுதுபோக்கு நேரத்தில் மேலதிகமாக ரூபா 30,000 வருமானம் ஈட்டலாம்! சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள். வீட்டில் இருந்து கொண்டே சுயமுயற்சியுடன் பணம் சம்பாதிப்பது எப்படி என்பதை அறிந்துகொள்ள உடனடியாக விரையுங்கள்!

காலம்: நாளை (23.04.2006) ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 2 மணி
இடம்: நாவலர் கலாசார மண்டபம், யாழ்ப்பாணம்

அனுமதி இலவசம்

பொருள் இல்லார்க்கு இவ்வுலகில்லை

(சி-49052)(21.14.15)

DXN

**COMPUTER EXPRESS**
**Institute of Information Technology**
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

**Diploma in Video Mixing**

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

*Course Contents*
- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- Adobe Premiere
- Cool 3D Studio
- Pinnacle Studio
- VCD Cutter
- Extra practical

Free Study Pack & Photos CD

Course fee :- 3000/=

நன்மைகள்:-
- பாடநெறியின் இறுதியில் Video Editing தொடர்பான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:- 24/04/2006 :- 08.30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு.கா. - நு ஆ இணைந்து அக்கரைப்பற்றில் போட்டி?

கொழும்பு, ஏப்.22

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு தனித் தனியாக வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் சார்பான 'நுஆ' கட்சியும், தேர்தலை ஒன்றிணைந்து சந்திக்க இப்போது தீர்மானம் எடுத்துள்ளன என அறிய வருகின்றது.

நீதிமன்ற உத்தரவு காரணமாக ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்களை இப்போது மே 20ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

அதில் அக்கரைப்பற்று பிரதேசசபைக்கான தேர்தலையே முஸ்லிம் காங்கிரஸும், நுஆவும் ஒன்றிணைந்து சந்திக்கத் தீர்மானித்திருக்கின்றன.

அமைச்சர் சேகு இஸ்ஸதீனை முஸ்லிம் காங்கிரஸிற்குள் உள்ளீர்க் கும் முயற்சிகளின் ஒரு கட்டமாக - பூர்வாங்க ஏற்பாடாக -இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறியவருகின்றது.

இருந்தும் சில இழுபறிகள் இன்னும் உள்ள காரணத்தினால் இந்த விடயத்தில் இறுதி முடிவு எடுப்பதில் கால தாமதம் ஏற்பட்டு வருகின்றதாம்.

அக்கரைப்பற்று பிரதேசசபைக்குப் போட்டியிட நுஆ கட்சியால் - சேகு இஸ்ஸதீன் சார்பில் 14 வேட்பாளர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் - 14 வேட்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த இரண்டு கட்சிகளும் இணைந்து போட்டியிடும் பட்சத்தில் இந்த இரண்டு பட்டியலில் ஒன்றை முன்னிறுத்தி, தேர்தலின் பின் மற்றைய தரப்புக்கு பட்டியலில் இடமளிக்க இணங்கவேண்டும். அப்படியான நிலையில் ஒரு தரப்புக்கு எத்தனை பேருக்கு இடமளிப்பது என்பதில் இன்னும் இழுபறி நீடிக்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மரச்சின்னத்தின் கீழான பட்டியலையே முன்னிறுத்த வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸினரும், இல்லை நுஆ கட்சியின் புறாச் சின்னத்தில் தாம் போட்டியிடும் பட்டியலையே முன்னிறுத்த வேண்டும் என சேகு இஸ்ஸதீன் தரப்பினரும் விடாப்பிடியாக நிற்கின்றனராம்.

இந்த இரண்டு காரணங்களினாலுமே இணைந்து போட்டியிடுவது தொடர்பாக இறுதித் தீர்மானத்தை எடுக்க முடியாத நிலை காணப்படுவதாகக் கூறப்படுகிறது.

இருப்பினும், தற்போது புனித 'உம்ரா' கடமையை நிறைவேற்றுவதற்காக மக்கா சென்றிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரஊவ் ஹக்கீம் 24ஆம் திகதி நாடு திரும்பியதும் இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு நல்லதொரு தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிடுகின்றன.

நுஆ கட்சியுடன் முரண்பட்டுக் கொண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைய முடிவெடுத்திருக்கும் பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீன், நுஆ கட்சியின் சார்பில் அக்கரைப்பற்றுப் பிரதேசசபைக்கு வேட்பாளர்களை நியமித்தாலும் கூட, நுஆ கட்சியின் சார்பில் அந்த வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் என அவர் ஒருபோதும் பிரசாரம் செய்யவில்லை.

அவர் உருவாக்கிய 'தென்கிழக்கு தேசியவாத அமைப்பு' புறாச் சின்னத்தில் போட்டியிடுவதாகவே அவர் பிரசாரம் செய்துவருகின்றார்.

இந்த நிலை காரணமாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் சேகு இஸ்ஸதீன் இணையத் தீர்மானம் எடுத்திருப்பதன் காரணமாகவும் நெகிழ்வுத் தன்மையுடன் சேகு இஸ்ஸதீன் செயற்பட்டு இரு கட்சிகளும் இணைந்து போட்டியிடும் முடிவை எடுப்பார் என அவரது தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரண்டு கட்சிகளும் இணைந்து போட்டியிட்டால் அக்கரைப்பற்றில் அமைச்சர் அதாவுல்லாஹ்வின் தரப்புப் பின்னடைய வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-க)

## 124 பேருக்கு வீடமைப்பு நிதி

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் 4 கிராமங்களைச் சேர்ந்த 124 பயனாளிகள் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர் நிர்மாணத் திட்டத்தின் வீடமைப்பு நிதியுதவியைப் பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படிப் பிரிவில் இவ்வாண்டிற்கான வீட்டுத் திட்டத்தில் ஆயிலி, பாலாவோடை, ஊரி, நீலங்காடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பயனாளிகளுக்கான விளக்கக் கூட்டம் கடந்த புதன்கிழமை காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையின் அனுசரணையுடன் நடைபெற்றது இதில் யாழ். மாவட்ட நீர்ப் பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம், நீர்ப் உத்தியோகத்தர்கள், காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு உத்தியோகத்தர்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஒ-202)

## திருமறைக் கலாமன்றம்

### நாடகப் பயிலகம் - விண்ணப்பம் கோரல்

எமது மன்றத்தால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற நாடகப் பயிற்சி நெறிக்கான 2006 ஆம் ஆண்டுக்கான 13ஆவது புதிய பிரிவு எதிர்வரும் 14.05.2006இல் ஆரம்பமாகவுள்ளது.

இப் பயிற்சி நெறியில் பயில்வதற்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களுக்கும், அரங்கு தொடர்பான பயிற்சியைப் பெற விரும்புபவர்களுக்கும், நாடமும் அரங்கியலையும் கற்கும் மாணவர்களுக்கும் பயனுடையதாக இப் பயிற்சி நெறி அமையும்.

பயில விரும்புவோர் யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 04.05.2006 இற்கு முன்னதாக ஒப்படைக்கவும்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-49064)
(54-11-49)

பொதுச் செயலாளர்
திருமறைக் கலாமன்றம்.

## இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின்

### வழியனுப்பு விழா

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 23.04.2006 பி.ப. 4 மணிக்கு கிறிஸ்தவ சேவ சிற்றாலயத்தில் அருட்திரு. அறிவர் எஸ்.ஜெபநேசன் தலைமையில் நடைபெறும்

வழியனுப்பப்படுவோர்

சகோ. M. ஜெயானந்தராஜா சகோ. S. டானியேல் மோகன்

சகோ. S. ஜோன் புவியரசன்

இவ்விழாவிற்கு தாங்கள் வருகைதந்து
ஆசி வழங்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,
சுன்னாகம், இலங்கை.
(49686)
(54-11-49)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கலாசாலையின் முன்னாள் பிரதி அதிபர்
திருமதி துரை ஆரோக்கியதாசன் (றோச்சேர்)
அவர்களின் அன்புத் துணைவியார்

### திருமதி இரஞ்சிதம் ஆரோக்கியதாசன்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சி அடைகின்றோம். பிரிவால் துயருறும் அவருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

(சி-49060)
(54-11-49)

அதிபர், விரிவுரையாளர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
பலாலி ஆசிரியர் கலாசாலை.

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் கணபதிப்பிள்ளை



(J.L.S. லொறி உரிமையாளர்)

நவிண்டில், கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும் நெல்லியடியை விதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (21.04.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவசங்கர் (லண்டன்), விமலசங்கர் (லண்டன்), சிவசங்கரி (நெல்லியடி), குருதாஸ் (விசுவமடு), குமரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கலைச்செல்வி, மதிவதனி, லயன்ஸ் சத்தியசீலன் (உடுத்துறை மகாவித்தியாலய ஆசிரியர்), தனுஷா, மைதிலி ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பொன். கந்தையா வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.
(49687)
(54-11-49)

தகவல்:
குருதாஸ் (மகன்)
(S.N.K. லொறி உரிமையாளர்),
காண்டீபன் (பேரன்)
(ஆனந்தா ஸ்ரோர்ஸ் - நெல்லியடி)

## தேவை

மரவிற்பனை நிலையத்திற்கு பலகை, தீராந்தி எடுத்துக்கொடுத்து விற்பனை செய்யக் கூடிய லிகிதர் தேவை. 35 வயதிற்கு மேற்பட்ட மரவிற்பனை அனுபவமுள்ளவராயின் நன்று.

தொடர்பு: அம்பாள் மரக்காலை
261, பருத்தித்துறை வீதி, வீரமாகாளி அம்மன் கோவில் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. 222 7354, 0777 111147

மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (49677)

## வீடு வளவு விற்பனைக்கு

ஊரெழு கிழக்கு, உடையார் ஒழுங்கையில் சுற்றுமதில் உடன் 6 பரப்பு காணியில் அமைந்த வீடு சகல வசதிகளுடன் கூடிய (3 அறை, 2 Hall, Pantry அறை, attached Bath, O/H Tank) வீடு விற்பனைக்குண்டு. வீட்டு சொந்தக்காரர் தற்பொழுது ஊரில் வந்து நிற்கிறார். உடனே வந்து அவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தொ.பே. 0112 593961 (49683)


ராஜா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா கபூர் நடித்த
அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
10.30,2.30,6.30,9.30 ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சுன்னாகம்
ஜீவா, சந்தியா மற்றும் பலர் நடித்த
டிஷ்யும்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 10.00

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா, விவேக் நடித்த
கள்வனின் காதலி
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30


## மரண அறிவித்தல்கள்

### விநாசி கணபதிப்பிள்ளை

சிங்கநகர், புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விநாசி கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (21.04.2006) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் V.G.தங்கவேல் (முன்னாள் ஆலோசகர், பனை அபிவிருத்திச்சபை, இயக்குநர், அறவளி போராட்டக்குழு), சிவபாதம் (அருண்மாஸ்டர், துணைபொறுப்பாளர், தமிழீழ கல்விக் கழகம் - கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும் டாக்டர் விமலாதேவி (பதிவு வைத்திய அதிகாரி, ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை), யோகேஸ்வரி (ஆசிரியை, கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனும் அருணன் (சட்டவலளர்), மயூரி, வேளினி, விமல்சினி, தர்சினி (மாணவிகள்: வட இந்து மகளிர் கல்லூரி), சித்திரலேகா (ஆசிரியை, புதுக்குடியிருப்பு) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2006) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2 மணிக்கு ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

'வேளிர் வாசம்'
சிங்கநகர்,
புலோலி தெற்கு, புலோலி.
(சி-49066)
(54-11-49)

தகவல்:
V.G. தங்கவேல்
(மகன்)

### வடிவேலு பார்வதிப்பிள்ளை



புளியங்கூடலைச் சொந்த இடமாகவும் நீராவியடி, பிறவுண் வீதியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு பார்வதிப்பிள்ளை அவர்கள் நேற்று (21.04.2006) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளை- ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான ஐயாத்துரை, முருகேசு, நாகம்மா மற்றும் தில்லையம்பலம், கண்ணம்மா (துணுக்காய்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, இராசம்மா மற்றும் பரமேஸ்வரி, செல்லப்பா மற்றும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராமலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் தங்கம்மாவின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2006) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் புளியங்கூடல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.
(49661)
(54-11-49)

தகவல்:
தில்லையம்பலம்
(தம்பி).

### ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள் ஸ்ரீபதி சர்மா



தென்னிந்தியா, கேரளம் கொல்லத்தைப் பிறப்பிடமாகவும், துன்னாலை வடக்கு, கரவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாள் நேற்று (21.04.2006) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் தென்னிந்தியா, கேரளம், கொல்லம் சுப்பிரமணியசர்மா - ஜானகி அம்மா தம்பதியரின் புதல்வியும் ஆயுர்வேத வைத்தியர் பிரம்மஸ்ரீ பொ.ஸ்ரீபதி சர்மாவின் அன்பு மனைவியும் பத்மநாயகி, பரமேஸ்வரி, சரஸ்வதி, சச்சிதானந்த சர்மா (ஜேர்மனி), கிருஷ்ணானந்த சர்மா (விரிவுரையாளர், சமஸ்கிருதத்துறை, யாழ். பல்கலைக் கழகம், சிவன்கோவில், நல்லூர்), அமுதாம்பாள் (காணிப்பதிவகம், திருகோணமலை), கமலாம்பாள் ஆகியோரின் அன்புத் தாயும் பவானந்த சர்மா, காலஞ்சென்ற பொன்னையா ஐயர், பாலசுப்பிரமணிய சர்மா (கண்டி), மனோன்மணி, காலஞ்சென்ற இராமகிருஷ்ண சர்மா, கிருஷ்ணாம்பாள் ஆகியோரின் பாசமிகு சித்தியும் பாலசுப்பிரமணியக்குருக்கள் (செல்வவிநாயகர் கோயில், குருநாகல்), காலஞ்சென்ற கணேசரட்ண சர்மா, இ.ஜெகதீஸ்வரசர்மா (மாரியம்மன் கோயில், நீர்கொழும்பு), ஆனந்தி (ஜேர்மனி), ரவிச்சந்திரிகா (ஆசிரியை, யா/வேம்படி உயர்தர மகளிர் பாடசாலை), திவாகரசர்மா (உதவிச்செயலாளர், வடக்கு-கிழக்கு ஆளுநர் அலுவலகம், திருகோணமலை), ரங்கநாதசர்மா (மாரியம்மன் கோயில், கம்பளை) ஆகியோரின் அன்பு மாமியாரும் விஜயலக்ஷ்மி, லோகேஸ்வரசர்மா (கண்டி), வாமதேவன், மதுரர் (ஜேர்மனி), ஜெயமாலா (ஆசிரியை), ஜெயவாணி (2ஆம் வருடம், இந்து நாகரிகம் சிறப்பு, கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்), வெங்கடேஸ்வர சர்மா, லக்ஷ்மணா, சங்கீதா, பிரவீணா, ஜெனார்த்தனன், கார்த்திக், நிவாஸன், ரமேஸ், பிரகாஷ், பிரணவன், திரியம்பகி, கௌரி, மஞ்சுளா, கிரிஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஹரிணி, நிலாயினி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.04.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தியால்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
(சி-49065)
(54-11-49)

தகவல்:
பொ. ஸ்ரீபதிசர்மா (கணவர்),
ஸ்ரீ. சச்சிதானந்தசர்மா (மகன்),
ஸ்ரீ. கிருஷ்ணானந்தசர்மா (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்ற ஐந்து மணித்தியாலங்களில்

# பதில் துணைவேந்தர் பதவியிலிருந்து விலகினார் பேராசிரியர் பரமேஸ்வரன்

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ். பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தராகப் பதவியேற்ற பேராசிரியர் வி.பரமேஸ்வரன் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் மாணவர்களின் எதிர்ப்பினால் ஐந்து மணித்தியாலங்களில் அந்தப் பொறுப்பிலிருந்து விலகினார் என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தராக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூலை நியமித்தது. இந் நியமனத்திற்கு மாணவர்கள் உட்பட பல்கலைக்கழகச் சமூகம் மத்தியில் பெரும் எதிர்ப்புக் கிளம்பியது.

இதனால் யாழ்ப்பாணம் வந்து தனது பதவியை அவர் பொறுப்பேற்கவில்லை. இதனால், அவர் பதில் துணைவேந்தராக பேராசிரியர் வி.பரமேஸ்வரனை நியமிக்குமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் கேட்டுக்கொண்டார். இதனையடுத்து பேராசிரியர் வி.பரமேஸ்வரனை பதில் துணைவேந்தராகப் பொறுப்பேற்குமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு கேட்டுக்கொண்டது.

ஆனால், இதற்கும் பல்கலைக்கழகத்திலிருந்து எதிர்ப்புக் கிளம்பியதால் அவரும் பதவியைப் பொறுப்பேற்க முடியவில்லை.

இந்நிலையில், பேராசிரியர் வி.பரமேஸ்வரன் கடந்த திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு பதில் துணைவேந்தராகப் பொறுப்பேற்று அலுவலகப் பணிகளை மேற்கொண்டார்.

இவரது திடீர் நடவடிக்கையையடுத்து மாணவர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உட்பட பல்கலைக்கழகச் சமூகத்தைச் சேர்ந்த பலர் பேராசிரியருடன் பேசி நிலைமையை விளக்கினர் என்று கூறப்படுகிறது.

இதன் பின்னர் - பதவியேற்று 5 மணித்தியாலங்களில் - பேராசிரியர் வி.பரமேஸ்வரன் பதில் துணைவேந்தர் பொறுப்பிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகினார் என்று தெரிவிக்கப்பட்டது.

துணைவேந்தர் பதவி வெற்றிடமாக இருப்பதால் பல்கலைச் செயற்பாடுகள் சீர்குலைந்துள்ளதாகவும் -

இதனால், மாணவர்களின் எதிர்காலம் பாழாகும் என்ற கவலையினாலேயே பதில் துணைவேந்தர் பதவியை தான் ஏற்றார் என்றும் -

பேராசிரியர் வி.பரமேஸ்வரன் அலுவலகத்தில் தன்னைச் சந்தித்தவர்களிடம் கூறினார் என்று பல்கலைக்கழக தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

பதில் துணைவேந்தர் பதவியை இனிமேல் ஏற்கமாட்டார் என்று அவர் மாணவர்களுக்கு கடிதம் மூலம் உத்தரவாதம் வழங்கினார் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ-14)

## புத்தூர் கொலைகள் நீதிமன்ற விசாரணை ஆரம்பம்

புத்தூர் ஊறணிப் பகுதியில் இடம்பெற்ற ஐந்து இளைஞர்களின் படுகொலைகள் சம்பந்தமானவிசாரணை நேற்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் நீதிவான் சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் இடம்பெற்றது.

இந்த விசாரணைகளின் போது படுகொலை செய்யப்பட்ட ஐந்து இளைஞர்களினதும் பெற்றோர், உறவினர்கள் நீதிமன்றத்துக்குச் சமுகமளித்திருந்தனர்.

ஓட்டோவில் பயணம் செய்த இளைஞர்களால் ஊறணிப் பகுதியில் இறக்கி விடப்பட்டவர் எனக் கூறப்படும் வசந்தன் என்பவர் நீதிவானின் அறையில் நீதிவான் முன்னிலையில் தனது சாட்சியத்தை அளித்தார்.

இந்தப் படுகொலை வழக்கின் பிரதான சாட்சியாகக் கருதப்படும் இந்த இளைஞனின் பாதுகாப்புக் கருதி நீதிவான் முன்னிலையில் நேரடியாக அவரது சாட்சியம் பெறப்பட்டது. நீதிவான் முன் சாட்சியமளித்த வசந்தன் -

வழமையாக இறந்தவர்கள் எனது வீட்டில் என்னைக் கொண்டுவந்து இறக்கிவிட்டுச் செல்வது வழக்கம். அந்த வகையில் சம்பவ தினமும் என்னை வீட்டில் விட்டு விட்டு அவர்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்ற சமயமே வழியில் கொலைகள் இடம்பெற்றுள்ளன. இது தவிர எனக்கு வேறு எதுவும் தெரியாது - என்று தெரிவித்தார்.

விசாரணை திங்கட்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ-3-86)(22)

## டெங்கு தடுப்பு வாரம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

'டெங்கு' தடுப்பு வாரம் திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 30ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்படவுள்ளதாக யாழ். சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பணிமனை அறிவித்துள்ளது.

இவ்வாரத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-202)

## முஸ்லிம் இளைஞனின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.நகரில் முனீஸ்வரன் வீதியில் வைத்து மீராமோகிதீன் ஜுனைத் அஸ்மி என்ற இளைஞரே இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தப் படுகொலையைக் கண்டித்து நேற்று வெள்ளிக்கிழமை பூரண கடையடைப்பை மேற்கொள்ளுமாறு யாழ். (புதுப்பள்ளி) சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து நேற்று நகரப் பகுதியில் உள்ள தேநீர்சாலைகள், மருந்தகங்கள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்கள் யாவும் இழுத்து மூடப்பட்டு கறுப்பு, வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். முனீஸ்வரன் வீதியில் உள்ள அனைத்துக் கடைகளும் மூடப்பட்டிருந்தன. வாயில்களில் கறுப்பு,வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

வடமராட்சிப் பகுதியிலும் தென்மராட்சியில் பல இடங்களிலும் கூட வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. அச்சுவேலியிலும் கடைகள் பூட்டப்பட்டிருந்தன.

தங்கள் அழைப்பை ஏற்று வர்த்தக நிலையங்களை மூடி ஒத்துழைப்பு நல்கிய சகல தரப்பினருக்கும் யாழ். ஜும் ஆ பள்ளிவாசல் நிர்வாகம் நன்றி தெரிவித்துள்ளது.

துக்கம் அனுஷ்டிக்க ஒத்துழைப்பு நல்கிய யாழ்.வணிகர் கழகத்தினர் மற்றும் யாழ்ப்பாண தமிழ் உறவுகளுக்கு நன்றி தெரிவித்து பள்ளிவாசல் நிர்வாகம் நேற்று செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்தது.

இளம் முஸ்லிம் இளைஞனின் கொலையைக் கண்டித்து நேற்றுப் பிற்பகல் ஜும் ஆ பள்ளிவாசல் நிர்வாகம் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் யாழ்.அலுவலகம் ஆகிய இடங்களில் மகஜர்களைக் கையளித்தது.

(ஐ-7-13-11-15-51-36-173-70)(22)

## இராணுவம் குற்றச்சாட்டு

லண்டன்,ஏப்.22

முல்லைத்தீவு கடற்பரப்பில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச்சேர்ந்த ஒருவர் பயணம் செய்த கடற்படை படகு ஒன்றின் மீது புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அதிவேக கண்ணாடி இழைப்படகில் வந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் கனரக ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தினர் - என்றும்.

இதன் மூலம் புலிகள் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறிவிட்டனர் எனவும் - இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது-என்று நேற்றிரவு பி.பி.ஸி. தெரிவித்தது. (ஐ-7)

## சேருவில...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகள் நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்டன.

பொலீஸ் உயரதிகாரி ஒருவரின் வாகனத்தை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக விசாரணைகளின் போது தெரியவந்திருக்கிறதாம். (ஐ-க)

## ஹெலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் அடுத்த சுற்று ஜெனீவாப் பேச்சுக்கான ஒரு திகதிக்கு புலிகளை இணங்க வைப்பதும் -

விசேட தூதுவர் ஹன்ஸன் போவரின் தற்போதைய உடனடி இலக்கு எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புலிகளுக்குப் பொருத்தமான ஹெலி வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பான பேச்சுகள், தொடர்பாடல்கள் ஒரு புறம் நோர்வேத் தரப்பினாலும் மறுபுறம் கண்காணிப்புக் குழுவினாலும் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிகின்றது.

பெரும்பாலும் இரண்டொரு நாள்களுக்குள் இவ்விவகாரத்துக்கு இணக்கமான முடிவு ஒன்று எட்டப்பட்டுவிடும் என நோர்வே அனுசரணைத் தரப்பும் கண்காணிப்புக் குழுத் தரப்பும் நம்புகின்றன என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-க)

## கிளைமோரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புத் தேடி இடம்பெயர்ந்து வரும் தமிழ் மக்கள் ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். மூதூர், கிளிவெட்டி பாரதி வித்தியாலயத்திலும் ஒரு தொகுதித் தமிழர்கள் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் இராணுவத்தினர் சரமாரியான துப்பாக்கிச் சூட்டை நடத்தினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

*(கிளைமோர் தாக்குதல் பற்றிய செய்தி இரண்டாம் பக்கத்தில்)* (ஐ-க-3)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வவுனியா மாவட்டப் பிரதித் தலைவரிடம் தமது பலத்த கண்டனத்தையும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் - யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட பிரதித் தலைவர் மற்றும் கண்காணிப்புக் குழு அதிகாரி ஆகியோர் நேற்று சம்பவம் இடம்பெற்ற இடத்தை நேரில் சென்று பார்வையிட்டனர். (ஐ-க)

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் நேற்று கிளிநொச்சி வந்தார்.

புலித்தேவனுடன் அவர் நடத்திய பேச்சுகளின் விவரங்களை உடனடியாக வெளியிடுவதில்லை என்று புலிகள் முடிவு செய்துள்ளனர்.

எனினும் -

விடுதலைப் புலிகளின் கிழக்குத் தளபதிகளின் வன்னிப் பயணத்துக்கு தனியார் ஹெலி வசதியை ஏற்படுத்திக் கொடுக்க அரசு திட்டமிட்டுள்ளது பற்றி அரசின் எழுத்து மூலச் செய்தியையே கண்காணிப்புக் குழுத் தலைவர், புலித்தேவனிடம் கையளித்தார் எனக் கொழும்பு வட்டாரங்கள் செய்தி வெளியிட்டன.

வன்னியில் தங்கியிருக்கும் கண்காணிப்புக் குழுத் தலைவர், இன்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-க)

## போர்நிறுத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களை இராணுவம் கொன்றது ஏன்?
கைக்குண்டெறிந்தார்களா?
கிளைமோர் வைத்தார்களா?
துப்பாக்கி வைத்திருந்தார்களா?
ஏன் கொன்றார்கள்?

தமிழனை துடைத்தழிக்க வேண்டுமென்ற வெறியியல்லவா அப்பாவி இளைஞர்கள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர். இனியாவது உங்கள் முடிவென்ன?

எதிரியின் சூழ்ச்சி இன்னும் புரியவில்லையா?

அச்சமும் பீதியும் சூழ்ந்த இராணுவ வேலிக்குள் குடாநாடு கொலைக்களமாக மாறியுள்ளது. இன்றோ நாளையோ என்ன நடக்குமென்ற பாதுகாப்பற்ற சூழலில் வாழ்வதை தவிர்த்து பாதுகாப்பானதும் விடுவிக்கப்பட்டதுமான வன்னிப் பகுதியை நோக்கி நகருங்கள்....

எந்தநேரத்திலும் முறிவடையப் போகும் போர்நிறுத்த உடன்பாடு எமது விடுதலையை எமது சுபீட்சமான நல்வாழ்வை ஒருபோதும் பெற்றுத்தராது. ஜெனீவாவிற்கு விடுதலைப் புலிகள் செல்லக்கூடாது என்பதற்காகவே அரசு பல நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின்றது.

மீண்டும் போரைத் தீவிரப்படுத்தி தமிழர்களை கொன்றொழிக்கவே சிங்களப் படையினரும் துணை இராணுவக் குழுக்களும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன.

எனவே வாருங்கள்! வழிகாட்ட தலைவன் இருக்கிறான். வழி நடத்த தளபதிகள் - பலர் போரிட - அதி நவீன சக்திமிக்க ஆயுத தளபாடங்கள் உள்ளன. வந்துதோள்கொடுங்கள்.

வரலாறு அழைக்கிறது.

ஒரு வருடத்திற்குள் யாழ்ப்பாண மண்ணை மீட்டெடுத்து சுதந்திரமாய் வாழ்வோம்.

இது இறுதிச் சந்தர்ப்பம்.

தவறவிட்டால் பெரும் தவறிளைத்தவராவீர்கள்!

எனவே சித்தித்து விரைவாகச் செயற்படுங்கள்! - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7-190)(22)


CATWAS.COM
COMPUTER ACADEMY
No:26, Somasundaram Avenue, Chundukuli, Jaffna.
T.P: 021 222 3805
23ம், 24ம் திகதிக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
DIPLOMA COURSES
DURATION ONE MONTH (30 DAYS)
Ms Office 1750/=
DTP 2000/=
Hard Ware 1800/=
CERTIFICATE COURSES
Word XP Page Maker 7.0
Access XP Photo Shop 7.0
Excel XP Corel Draw 11.0
Power Point XP HTML
Kids Program



INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Science and Technology
MPCS Building,
27, K.K.S.Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No: 021 222 3643
அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் 24-04-2006 முதல் பெற்றுக் கொள்ளலாம்.
Special Classes
On-Line Classes
* Dip.in PC Application & Office Management
(MS Office syllabus included)
* Dip.in Desktop Publishing
Work shop
PC Maintenance & Repairs
விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் வார நாட்களில் தொடர்பு கொள்ளவும்
வகுப்புக்கள் ஆரம்பம் 10-05-2006
சகல கற்கை நெறிகளுக்குமான பதிவுக் கட்டணம் : 250/-
Centre for Information Technology
-Executive Officer



324, Palaly Road, Jaffna.
ஏப்ரல் 30வரை விசேட சலுகைகள்
Microsoft Certified
MCS Systems Engineer
* குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
* Microsoft நிறுவன அதிபர் Bill Gates வழங்கும் சான்றிதழ்
* Network Manager, System Administrator தொழில் வாய்ப்புக்கள்
* சான்றிதழ் மூலம் வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
*****Supported by UNDP/JRRP*****




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.04.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும்

வெளியீடு 10

# புலமைப்பரிசில் பரீட்சை

## மாதிரி வினாப்பத்திரம்

*நேரம் : 45 நிமிடம்* **திரு. த. தர்ஸன்.** -வவுனியா.

**1 தொடக்கம் 30 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் சரியான வீடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

01. 
உருவை மிக நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவு செய்க?
01. வானம், பயணிகள், போக்குவரத்து.
02. பயணிகள், எரிபொருள், கடல்.
03. வேகம் அதிகம், பொருள்கள், தரை.

02. 
உருவில் காணும் சக்தி முதலில் இருந்து பெறப்படும் சக்தியாக அமைவது யாது?
01. மின்சக்தி. ஒலிச்சக்தி.
02. வெப்பசக்தி, ஒளிச்சக்தி.
03. இயக்கசக்தி, வெப்பசக்தி.

03. திருத்தமான கருத்தைத் தரும் வாக்கியத்தைத் தெரிவு செய்க?
01. வாசிப்பு மனிதனது அறிவு விருத்தியைப் பாதிக்கிறது.
02. அறிவு விருத்தி நாட்டின் அபிவிருத்தியைப் பாதிப்படையச் செய்கிறது.
03. வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைய முடிகிறது.


04. குமரன் வீதியில் இருந்த பொதியொன்றைக் கண்டெடுத்தான். அப்பொதியின் உரிமையாளரைத் தேடிச் சென்று அப்பொதியைச் சேர்ப்பித்தான் எனின் குமரனைப் பற்றிக் கூறக்கூடியது யாது?
01. குமரன் நேர்மையானவன்.
02. குமரன் அதிஸ்டமானவன்.
03. குமரன் சோம்பேறி ஆவான்.

05.பின்வரும் விடைகளில் நீளத்தை அளக்கும் முறையைச் சரியான ஒழுங்கில் தருவது?
01. கிலோமீற்றர், சென்ரீமீற்றர், மீற்றர், மில்லிமீற்றர்.
02. மில்லிமீற்றர், சென்ரீமீற்றர், மீற்றர், கிலோமீற்றர்.
03. மீற்றர், கிலோமீற்றர், சென்ரீமீற்றர், மில்லி மீற்றர்.

06. T,O,Z, V,B ஆகிய எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடிக்கு முன் காட்டினால் அதே அமைப்பில் மாற்றமின்றி தெரிவு செய்யும் எழுத்துக்களாக அமைபவை யாது?
01. TOV 02. ZBT 03. BZT

07. 
உருவில் காட்டப்படும் செயற்பாடு மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?
01. தாவரங்களை நடுவதன் மூலம் சுற்றாடல் எழுச்சி பெறுகிறது.
02. தாவரங்கள் காபனீரொட்சைட்டை சுவாசிக்கின்றன.
03.தாவரங்கள் ஒளித்தொகுப்பிற்கு ஒட்சிசனைப் பயன்படுத்துகின்றன.

08. 
அருகில் காணப்படும் இசைக்கருவி எவ்வகையைச் சேர்ந்தது.
01. கஞ்சகக்கருவி.
02. துளைக்கருவி.
03. நரம்புக்கருவி.

09. 
அருகில் காணப்படும் உரு எத்தனையாம் வகை நெம்பு ஆகும்?
01. முதலாம் வகை.
02. இரண்டாம் வகை.
03. மூன்றாம் வகை.

10.பாடசாலையின் விளம்பரப் பலகையில் பின்வருமாறு காணப்பட்டது. "இவ் வருட மூன்றாம் தவணைப் பரீட்சைகள் நவம்பர் 8ஆம் திகதி ஆரம்பிக்கும்" இத்தகவல் ஓர்
01. அறிக்கை 02. அறிவுறுத்தல் 03. அறிவித்தல்

11.கீழ்க்காணும் பொருள்களில் உயர ஒழுங்கு முறைப்படி காட்டும் விடையாக அமைவது யாது?
A மின் இணைப்புக்கம்பம் B தொலைபேசி இணைப்புக் கம்பம்
C தொலைத்தொடர்புக் கோபுரம் D வீட்டு வேலிக்கம்பம்
01. ABCD 02. DCBA 03. CABD

12. வாழ்வில் ஆரோக்கியத்தைப் பேணச் சிறுவயதில் இருந்து செய்யக்கூடாத செயற்பாடாக நீர் கருதுவது யாது?
01. மகிழ்ச்சியாக இருத்தல்.
02. மது அருந்துதல்.
03. உடற்பயிற்சி செய்தல்.

13.குவாசியாக்கோர் நோய் ஏற்படுவது எப்போசனைக் குறைபாட்டினால் ஆகும்?
01. புரதம் 02. கொழுப்பு 03. காபோவைதரேற்

14."கற்பகத்தரு" எனச் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்படும் தாவரம் எது?
01. கற்பூரவள்ளி 02. சூரியகாந்தி 03. பனை

15. 
உருவில் காட்டப்படும் பொருளினைக் கண்காட்சி ஒன்றிற்கு நீர் தயார் செய்வதற்கு உமக்கு தேவையான பிரதான பொருளாக அமைவது.
01. தென்னம் பன்னாடை.
02. கடதாசி. 03. பொலித்தீன்.

16.உமது வீடு தீப்பற்றிக் கொண்டால் உம்மாலும் அயலவராலும் தீயை அணைக்க முடியாத சந்தர்ப்பங்களில் இந்த துரதிஸ்டவசமான தகவலைத் தெரிவிப்பதற்கு நீர் முதலில் சுழற்ற வேண்டிய தொலைபேசி இலக்கம்
01. பொலிஸ் அலுவலகம். 02. தீயணைப்பு அலுவலகம்.
03. வைத்தியசாலை.

17.பாவலரும் பாமரரும் ஏழை பணக்காரன் என்று பாகுபாடு இன்றி ஒரே தருணத்தில் அறியும் நோக்குடன் செய்தியை வெளிக்கொணர்வதற்கு சிறந்த வெகுசன ஊடகம் என நீர் கருதுவது எது?
01. பத்திரிகை. 02. வானொலி. 03. தொலைக்காட்சி.

18.சிறந்த மாணவனிடம் இருக்க வேண்டிய நற்பண்பாக அமைவது எது?
01. ஒழுக்கமின்மை. 02. பொறாமை. 03. கீழ்ப்பணிவு.

19.கீழ்க் காண்பவற்றுள் கோடைகாலத்தில் உம்மால் அவதானிக்க முடியாதது எது?
01. சூரியன். 02. வெள்ளம். 03. பறவைகள்.

20.விபுலானந்தரது திரு உருவச்சிலை ஒன்று இன்று .................................. செய்து வைக்கப்பட்டது எனக் கூறப்படும் செய்தியை அழைக்கப் பயன்படும் சொல்லை இடைவெளியில் எழுதுக.
01. திறப்புவிழா 2. திரைமூடல் 03. திரைநீக்கம்

21.செடியாகவே வளரும். இவற்றின் விதையிலிருந்து பெரும்பாலும் எண்ணெய் தயார் செய்வார். இதில் இருந்து உணவுப் பொருள்களும் தயார்செய்ய முடியும். இத்தகவலைக் கொண்டு இவை தயார் செய்யப் பயன்படும் தாவரத்தை இணங்காண்க.
01. உழுந்து 02. சூரியகாந்தி 03. எள்ளு

22.* மனிதர்களின் பாதுகாப்பிற்குப் பயன்படுத்தப்படும்
* வெப்பம், நுண்ணங்கியிலிருந்தும் பாதுகாக்கிறது.
* மூலப்பொருள் மரப்பாலில் இருந்தே பெறப்படுகிறது.
* இதில் பெறுமதிக்கு ஏற்ப தரமும் மாறுபடுகிறது.
இத்தகவலை சரியாக காட்டும் படமாக அமைவது எது?

01.  02.  03. 


23.தனியார் பேருந்து ஒன்றில் 1km இக்கு வயது வந்தவர்களிற்கு 3 ரூபா கட்டணம் அறவிடப்படுகிறது. இது தொடர்பாக கூறக்கூடியது யாது?
01. 1km செல்வதற்கு சிறுவர்களிற்கு 1 ரூபா கட்டணம் அறவிடப்படும்.
02. 3km செல்வதற்கு வயது வந்தவர்களிற்கு 9 ரூபாவை விடக் கூடுதலான கட்டணம் அறவிடப்படமாட்டாது.
03. 3km செல்வதற்கு மூன்று சிறுவர்களிற்கு 3 ரூபா கட்டணம் அறவிடப்படும்.




24.வானவேடிக்கை ஒன்றிற்காகப் பலூன்களிற்குக் காற்று நிரப்பப்பட்டுக் காற்றில் பறக்க விடப்படுகிறது. இப்பறக்கும் பலூன்களில் அடைக்கப்பட்டிருக்கக் கூடிய வாயுவின் கூறு என நீர் கருதுவது எது?
01. ஒட்சிசன் 02. காபனீரொட்சைட் 03. ஐதரசன்

25.கீழ் தரப்படும் சம்பவங்களை ஒழுங்குபடுத்திப் பெறப்படும் விடையின் கீழ் கோடிடுக.
A - சங்கர் நிலத்தைப் பண்படுத்தினான்.
B - மிளகாய்ச் செடியை நாட்டினான்.
C - பசளையிட்டு நீரை ஒழுங்காகப் பாய்ச்சினான்.
D - செடி செழிப்பாக வளர்ந்து வந்தது.
E - சங்கரிற்கு வீட்டுத்தோட்டம் செய்ய வேண்டும். போல தோன்றியது.
01. EBACD 02. EABCD 03. ABECD

26.A - மதன் கொழும்புக்கு செல்ல வேண்டியிருந்தது.
B - ஆதலால் காலி புகையிர நிலையத்தை வந்தடைந்தான்
C - புகையிரதப் பயண அனுமதிச்சிட்டையைப் பெற்றுக் கொண்டான்.
D - அனுமதிச் சிட்டையைப் பயன்படுத்திப் பார்வையாளர் அரங்கை அடைந்தான்.
E - புகைவண்டியின் வருகைக்காக அரங்கு இருக்கையில் அமர்ந்து கொண்டான்.
01. EBACD 02. ABCDE 03. ABECD

27. இவ்வுருக்களின் நிரையிலே அடுத்து வரவேண்டிய பொருத்தமான உருவைக் கீழே தரப்பட்ட உருவிலிருந்து தெரிவு செய்க.



01.  02.  03. 

28.கீழ்க்காணும் உருக்களில் வேறுபட்ட உருவின் கீழ் கோடிடுக.
01.  02.  03. 

29. 
அருகில் காணப்படும் உருவில் காட்டப்படுவது வீதிக்குறியீடு ஆகும். இதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது.
01. ஒலி எழுப்பத் தடை 02. புகைத்தலாகாது 3. அபாயம்

30. ஒருவர் செய்த உதவியை ஒருபோதும் மறந்து விடக்கூடாது. இக் கருத்தை வலியுறுத்தும் பழமொழி எது?
1. உப்பிட்டவரை உள்ளளவும் நினை 2. ஆறின கஞ்சி பழங்கஞ்சி
3. பசுமரத்தாணிப் போல

* பின்வரும் வினாக்களை நன்கு வாசித்து விளங்கிக் கொண்டபின் சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

31.கடிகாரம் ஒன்று மணிக்கு 4 நிமிடங்கள் பிந்திச் செல்லும் பிறபகல் 3 மணிக்குச் சரியான நேரத்தைக் காட்டும், அக் கடிகாரம் பி.ப 6.30 மணிக்கு எந்த நேரத்தைக் காட்டும்.
..........................................................................................

32.கீழ்க்காணும் எண்கோலத்தைப் புரிந்துகொண்டு வெற்றுக் கூட்டில் வரவேண்டிய இலக்கத்தைப் புள்ளிக் கோட்டிலிடுக.


| | | |
|---|---|---|
| 4 | 5 | 6 |
| 3 | 2 | 1 |
| | 9 | 8 |

......................

| | | |
|---|---|---|
| 17 | 20 | 23 |
| 16 | 13 | 10 |
| | 9 | 6 |

.................


33.கீழே தரப்படும் உபகரணங்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தைப் புள்ளிக் கோட்டில் தருக.

01. .................... 02. ........................ 03. ....................

* கீழே தரப்படும் தகவல்களை அவதானித்துப் பின்வரும் வினாவிற்கு விடையளிக்குக.


□ + □ = 6
○ + □ = 5
△ + ○ = 6

34. 
அருகில் காணப்படும் தராசைச் சமப்படுத்த மறுதட்டில் இடவேண்டிய படிகள் ஆக அமையக்கூடியது.
01. □ + □ + ○ 02. △ + ○ + □
03. △ + △ - ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. கரன் என்பவன் சாந்தனை விட இரு மாபிள்கள் அதிகமாகவும், சுதன் என்பவனை விட நான்கு மாபிள்கள் அதிகமாகவும், வைத்துள்ளான். கரனிடம் 10 மாபிள்கள் இருப்பின் மூவரிடமும் உள்ள மாபிள்கள் எத்தனை?


01. 12 02. 24 03. 36

36. 
அருகில் காணப்படும் சதுரக் கட்டங்கள் அனைத்தும் சமனானவை. இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள சதுரக்கட்டத்தின் பரப்பளவு $2cm^2$ ஆகும் எனின் உருவில் காணப்படும் சதுரக் கட்டடங்களின் மொத்தப் பரப்பளவு யாது?

37. பத்திரிகை நிறுவனமொன்றில் இருந்து வரும் தினசரி இதழின் ஒருபக்கத்தில் 365 சொற்கள் பதிக்கப்படுகின்றன. இவ்விதழில் 7 பக்கங்கள் காணப்படுகின்றன எனின் தினசரிப் பத்திரிகையில் காணப்பட்ட மொத்த சொற்கள் எத்தனை?

38. இலங்கையின் மிகப்பெரிய தாவரவியற்பூங்கா எது?

39. இலங்கையில் அதிகளவு நெல் பயிரிடப்படும் இடம் எது?

40. 
அருகில் காட்டப்படும் உருவின் பெயரைத் தந்து அந்த உருவின் முகங்களின் எண்ணிக்கையையும் தருக.

## விடைக் குறிப்புகள்

## பொருளியல் - II

வெளியீடு 01

திரு. S.வரதராஜன் B.A.*(Hons)* - யாழ்ப்பாணம்.

### பகுதி-II 'அ'

(17.04.2006ஆம் திகதி வெளியாகிய பொருளியல் -II, பகுதி II இன் விடைக்குறிப்புகள் இங்கு பிரசுரமாகின்றன.)

வினா இல. 01

(i) கொடுக்கல் வாங்கல் நோக்கம்

அன்றாடக் கொடுக்கல் வாங்கல் நோக்கம் கருதி மக்கள் வைத்திருக்க விரும்பும் பணத் தின் அளவு நுகர்வுப் பொருள்கள் சேவைகளைக் கொள்ளவனவு செய்யும் நோக்கம் கருதி மக்கள் வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவு வருமானம் குறையக் கொடுக்கல் வாங்கல் கேள்வியும் குறையும்.

பாதுகாப்பு நோக்கம்

எதிர்பாராத விதமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளைத் தாங்கிக்கொள்வதற்காக மக்கள் வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவு நோய், மரணம் போன்றவற்றினால் ஏற்படக்கூடிய செலவுகளைத் தாங்கிக்கொள்வதற்காக மக்கள் வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவு இது வருமானத்தில் தங்கியுள்ளது. வருமானம் அதிகரிக்கப் பாதுகாப்புக் கேள்வியும் அதிகரிக்கும் வருமானமும் குறையப் பாதுகாப்புக் கேள்வியும் குறையும்.

(ii) **M1** பொது மக்களிடமுள்ள நாணயம், பொதுமக்களின் பெயரில் உள்ள கேள்வி வைப்பு.

**M2 M1** உடன் பொதுமக்களின் பெயரில் வணிக வங்கிகளில் உள்ள சேமிப்பு தவணை வைப்புகள்.

**M3 M2** உடன் பயணிகள் காசோலைகள், வர்த்தக உண்டியல்கள்.

**M4 M3** உடன் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளிலுள்ள சேமிப்புத் தவணை வைப்புகள் மற்றும் நிதிக் கம்பனிகளில் உள்ள சேமிப்புத் தவணை வைப்புகள்.

(iii) வங்கியின் கையிலுள்ள காசு, மத்திய வங்கியிடமுள்ள காசு வெளிநாட்டு ஒதுக்குகள், அழைப்புப் பணம் திறைசேரி உண்டியல்கள் ஏனைய குறுங்கால உண்டியல்கள்.

வைப்பாளரின் காசுத் தேவையைப் பூர்த்தி செய்தல்,

மத்திய வங்கியின் காசு ஒதுக்குத் தேவையைப் பூர்த்தி செய்தல்.

வினா.இல.02

(i) பணநிரம்பல், வங்கிக்கடன், வட்டிவீதங்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்தும் நோக்கம் கருதி மத்திய வங்கியால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை பொருளாதார உறுதிநிலையைப் பேணுதல், நிறைதொழில் மட்டத்தை அடைதல், சமத்துவத்தை ஏற்படுத்துதல் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துதல்.

வங்கி வீதம், பகீரங்க சந்தை நடவடிக்கைகள், சட்டப்படியான ஒதுக்குதல் தேவை, அறிவுறுத்தல்கள், நேரடி நடவடிக்கை.

(ii) வணிகவங்கிகளின் வைப்புகளை வைத்திருத்தல்.

இறுதிக் கடன் ஈவோன் என்றவகையில் வணிகவங்கிகளுக்குக் கடன் வழங்குதல்.

வணிகவங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்களைத் தீர்க்கின்ற நிறுவனமாக - தீர்வகமாகத் தொழிற்படுதல் வணிகவங்கிகளின் கடன்களைக் கட்டுப்படுத்தல்.

(iii) (அ) வங்கி வீதம் அதிகரிக்கப்படுதல்.

வணிகவங்கிகளின் கடன்களின் வட்டிவீதம் அதிகரிக்கும்.

கடன்களின் கேள்வி குறைவடையக் கடன்கள் குறைவடையும்.

மற்றவைகள் மாறாதநிலையில் பணநிரம்பல் குறைவடையும்.

முதலீடுகள் குறைவடையும், உற்பத்திமட்டம் குறைவடையும்,

வேலை வாய்ப்புமட்டம் குறைவடையும்.

ஆ) சட்டப்படியான ஒதுக்குத் தேவைகளைக் குறைத்தல்.

வணிகவங்கிகளின் கையிருப்பில் உள்ள காசு அதிகரிக்கும்.

வணிக வங்கிகளின் கடன்கள் அதிகரிக்கும்.

மற்றவைகள் மாறாத நிலையில் பணநிரம்பல் அதிகரிக்கும்.

பணவீக்க விளைவுகள் தோன்றும்.

முதலீடுகள் அதிகரிக்கும், உற்பத்தி மட்டம் அதிகரிக்கும், வேலைவாய்ப்பு மட்டம் அதிகரிக்கும்.

எடுகோள் : வணிக வங்கிகளிடம் மிகை ஒதுக்குகள் இருத்தல் ஆகாது.

வினா இல.03

ஒரு பொருளின் உற்பத்தி தொடர்பான ஒப்பீட்டுச் செலவுகள் நாடுகளுக்கிடையே வேறுபட்டுள்ளன. இவ்வேறுபாட்டிற்கு அடிப்படையான காரணிகள் வருமாறு:

நாடுகளுக்கிடையில் காணப்படும் ஒப்பீட்டு ரீதியான காரணி நிரம்பலில் உள்ள வேறுபாடு சில நாடுகளில் ஒப்பிட்டு ரீதியில் ஊழியம் கூடுதலாகக் காணப்படும். வேறு சில நாடுகளில் ஒப்பீட்டு ரீதியில் மூலதனம் கூடுதலாகக் காணப்படும்.

உற்பத்தியில் கையாளப்படும் தொழில்நுட்பத்தில் காணப்படும் வேறுபாடு

உற்பத்தியில் பயன்படுத்தப்படும் காரணிச் சேர்க்கைகள் வேறுபட்டிருத்தல்

காரணிச் சேர்க்கைகள் வேறுபட்டிருத்தல்

உற்பத்தி நடத்தையில் காணப்படும் அளவுத்திட்டம் வேறுபட்டிருத்தல்

குறிப்பிட்ட சில உற்பத்திகளில் அதிகரித்துச் செல்லும் அளவுத்திட்ட விதி செயற்படும் வேறு சில உற்பத்திகளில் குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி செயற்படும்.

மேலே குறிப்பிட்ட காரணிகளின் அடிப்படையில் நாடுகளுக் கிடையே உற்பத்தியில் ஒப்பீட்டுச் செலவு வேறுபடுகின்றது.

| | | 1995 | 2004 |
|---|---|---|---|
| (ii) | நகரவுப் பொருள்கள் | 22 | 20 |
| | இடைத்தரப் பொருள்கள் | 51 | 58 |
| | முதலீட்டுப் பொருள்கள் | 22 | 21 |

நுகர்வுப் பொருள்கள், இறக்குமதிகளின் பங்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

முதலீட்டுப் பொருள்களின் இறக்குமதிகளின் பங்கு அதிகரித்துள்ளது.

(iii) பண்ட வர்த்தக மாற்று வீதத்தில் ஏற்படும் வீழ்ச்சி நாட்டின் ஏற்றுமதிகளின் இறக்குமதிக் கொள்வனவுச் சக்தியில் ஏற்படும் வீழ்ச்சியைக் குறிக்கின்றது. எனவே நாடு முன்னர் ஏற்றுமதி செய்த அதேயளவு பொருள்களைக்கொண்டு முன்னரிலும் பார்க்கக் குறைந்தளவு இறக்குமதியே மேற்கொள்முடியும். வேறுவிதமாகக் கூறுவதாயின் முன்னர் செய்த அதே இறக்குமதிகளை, செய்வதற்கு முன்னரிலும் பார்க்கக் கூடுதலாக ஏற்றுமதிகள் தேவைப்படுகின்றது. எனவே, இது நாட்டின் மெய்வருமானத்தின் வீழ்ச்சியைக் குறிக்கும்.

உதாரணமாக ஏற்றுமதிவிலைச்சுட்டெண் 300 ஆகவும், இறக்குமதி விலைச் சுட்டெண் 150 ஆகவும், இருக்குமாயின், பண்ட வர்த்தக மாற்றுவீதம் 200 ஆகும். இந்நிலையில் மற்றவகள் மாறாத நிலையில் ஏற்றுமதி விலைகள் 50 வீதத்தால் குறையுமாயின், பண்டவர்த்தக மாற்றுவீதம் 100 ஆகக் குறையும். எனவே, இங்கு ஏற்றுமதிகளின் இறக்குமதி இயலளவு மெய்வருமானம் 50 வீதத்தால் குறையும்.

(பொருளியல் -II இல் பகுதி -II விடைக்குறிப்புளின் தொடர்ச்சி 28.04.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

## விடைக் குறிப்புகள்

## புலமைப்பரிசில் பரீட்சை

வெளியீடு 09

திரு. வே. அன்பழகன் - யாழ்.

(01) 01. குணசீலன் அருட்செல்வம் 02. 9 வருடம் 6 மாதம்
03. திரு.குணசீலன் 04. வியாபாரம்
05. தரம் 4 06. கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்

(02) 01. ஏப்ரல் 02. 205
03. 88 04. 14
05. 145

(03) 01. சனி, ஞாயிறு 02. சம்மதக் கடிதம்
03. அதிபர் 04. சரி
05. சரி 06. பிழை
07. நாள்களில் 08. ஆசை
09. வகுப்பு 10. நடைபெறுகின்றது
11. அலுவலகம் 12. அதிபர்
13. **Sunday** 14. **Name**
15. கணனி 16. நடைபெறுகின்றன.
17. கணனி கல்வி 18. விருப்பம் உள்ள

(04) 01. எறும்பு 02. பூசினி வண்டு
03. எருது வண்டு 04. நீர்த்தோட்டி
05. சில்வண்டு

(05) 01. 1 02. 3
03. 2 04. 3
05. 1 06. 1
07. 2 08. 3
09. 3 10. 3

(06) 01. இலுப்பை 02. ஆமணக்கு

(07) 9.50
15.00
10.00
20.00
54.50

(08) 01. வாள் 02. துறப்பணம்
03. போத்தல் மூடி திறப்பி **Bottle Opener**
04. உளி 05. மின் சோதிப்பான்

(09) 01. மண்வெட்டி 02. தூக்குக்குண்டு
03. சீவுளி 04. வலை
05. துருத்தி

(10) 01. பொதுமக்களுக்கு 02. சுகாதாரப்பகுதி
03. டெங்குக் காய்ச்சல் 04.வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும்.
05. சிரட்டை, பேணி பிளாஸ்ரிக் போத்தல்கள்
06. ஆபத்து 07. புனல், சலம்
08. சுத்தம் 09. நீங்கள்
10. நுளம்பினால்

(11) 01. சந்திரன் 02. குடு குடு

(12) 01. மம கொந்தின் இன்னவா 02. ஒபே நம மொகத்த?
03. கபுட்டா களு பாட்டாய்

(13) 01. கண் 02. வெள்ளை நிறம்
03. மல்லிகைப்பூ

(14) 01. ஆயிரத்து எண்ணூற்று இருபத்தைந்து
02. 5018 03. 8631
04. 3567 05. (i) **XV** (ii) **XVI**
06. 39998, 40000 07. 24m
08. 638, 683,836, 863 09. 900
10. 2377

(15) 01. 1975 02. 144 03. 6158 04. 104
05. 200 cm

(16) பொருத்தமான வசனங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org